# திருக்கோயில்

பிப்ரவரி 1986 விலை ரூ 2.00






திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு வருகை புரிந்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்களுக்கு ஆலயத்தின் தக்கார் திரு சுப்பிரமணிய ஆதித்தன் அவர்கள் வரவேற்பிதழ் வாசித்தளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

முகப்பு

அருள்மிகு திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமிகள் தங்கத் தேரில் எழுந்தருளியுள்ள திருக்காட்சி.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை 28 | திருவள்ளுவர் ஆண்டு 2017 குரோதன ஆண்டு மாசித்திங்கள் பிப்ரவரி 1986 விலை ரூ. 2-00 | மணி 2 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

**உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா ரூ 24.00 மட்டும்**

புதிய சந்தாதாரர்கள் ஒரு ஆண்டிற்கு ரூ. 24/- எனக் கணக்கிட்டு எத்தனை ஆண்டுகளுக்குச் சந்தா கட்ட விரும்பினாலும் அத்தனை ஆண்டுகளுக்குப் பணம் அனுப்பிவைக்கலாம். அவர்கள் எப்பொழுது பணம் அனுப்பினாலும் பணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தத் திங்களிலிருந்து அவர்கள் அனுப்பிய காலம் முடிய ''திருக்கோயில்'' இதழ் அனுப்பிவைக்கப்படும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

## பொருளடக்கம்

*தஞ்சைப் பெரிய கோயிலில் மாமன்னன் இராஜராஜன் சதய விழாவில் மாண்புமிகு அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை.*

*பழநித் திருத்தல வரலாறு*

*உறையூர் நாச்சியார் கோவில் —வி.மணி*

*அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம்*

*சோதியே, சுடரே, சூழொளி விளக்கே —அண்ணா சச்சிதானந்தம்*

*கிருட்டிணன் தூது —டாக்டர் த. அமிர்தலிங்கம்*

*வாசகர் எண்ணங்கள்*

# தஞ்சைப் பெரிய கோயிலில் நடைபெற்ற மாமன்னன் இராஜராஜன் சதய விழாவில்

## மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை



சிறப்புமிக்க இந்த இராஜராஜன் சதய விழாவிற்குத் தலைமை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களே! தமிழக அரசினுடைய அறநிலையத் துறைச் செயலாளர் அவர்களே! ஆணையர் அவர்களே! தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! அறிஞர் பெருமக்களே! இங்கே வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே!

### முறையான தமிழக வரலாற்றிற்கு முதல் வழிகாட்டி இராஜராஜனே!

நான் இராஜராஜசோழனின் வரலாற்றையோ அல்லது வரலாற்றிலே அவன் உருவாக்கிச் சென்றிருக்கிற சிறப்புக்களையோ சொல்ல வேண்டிய அவசியத்திலே இங்கே இருக்கவில்லை என்பதை நீங்கள் உணர்ந்து இருப்பதைப் போலவே நானும் உணர்ந்திருக்கிறேன். இருந்தாலும், இவ்வளவு மிகச்சிறப்பு பெற்ற ஆலயத்தை ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே இங்கே எழுப்பித் தமிழகத்தினுடைய சிறப்பை உலகத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் தலைநிமிர்ந்து சொல்லுகின்ற வகையில் மிகப்பெரிய ஆலயத்தை எழுப்பிச் சென்றிருக்கின்ற இராஜராஜனை நாம் நினைவு கூருகின்றவர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் இன்றைக்கு நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறோம். இந்த ஆலயத்தை இராஜராஜன் ஒருவேளை எழுப்பியிருக்காவிட்டால், இதற்கு முன்னாலே தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்கள் என்று வர்ணிக்கப்படுகின்ற மாபெரும் மன்னர்கள் பட்டியலிலே இராஜராஜனும் ஒருவன் என்று எண்ணுகின்ற அளவிலே மாத்திரம் அவன் இருந்துவிட்டுப் போயிருக்கக்கூடும். இன்றைக்கு இராஜராஜனுக்கு முன்னாலே தமிழகத்தில் மிகப்பெரிய அரசர்கள், ஆற்றல் மிக்கவர்கள் சிறப்புமிக்கவர்கள் எல்லாம் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை ஆங்காங்கே சில இலக்கியக் குறிப்புகளிலே இருந்து தெரிந்து கொள்கிற வாய்ப்பைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இலக்கியங்களிலே இருந்து செய்திகளைத் தெரிந்து கொள்கிற நேரத்தில், கவிஞர்கள் தங்களுடைய கவிதைகளிலே சில கருத்துக்களை வெளியிடுகிற நேரத்தில் தமிழ் நாட்டிலே மிகச்சிறந்த மன்னர்கள் வாழ்ந்

திருக்கிறார்கள் என்கிற அந்தச்சிறப்பை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் ஒரு வகுக்கப்பட்ட தொகுக்கப்பட்ட முறையான வரலாற்றை முதன் முதலில் தமிழ் மக்களுக்குத் தந்துவிட்டுச் சென்றவன் இராஜராஜனே ஆவான். இராஜராஜனுடைய காலத்திற்குப் பின்னாலே தான் தமிழ் மக்களுடைய வரலாறு மிகச்சிறந்த வரலாறாகத் தொகுக்கப்பட்ட வரலாறாக, சரித்திரம்என்று நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய விரிந்த அடிப்படையிலே இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கிறது. ஒருவேளைஅவன் இந்த ஆலயத்தை எழுப்பாமல் அவன் வாழ்ந்திருந்த அரண்மனையை பெரிதாக எழுப்பியிருப்பானேயானால், அவனுக்கு இந்த அளவு பெருமை கிடைத்திருக்குமா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## தஞ்சைப் பெரியகோயிலும் தாஜ்மகாலும்

இன்று இந்தியாவிலே மிகுந்த புகழ்பெற்ற தாஜ்மஹாலை நாம் அறிவோம். இங்கே இருக்கிற மக்கள் அதை எவ்வளவு பேர் அதைப் பார்த்திருக்கிறார்கள் என்பதை விட அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறவர்கள் தொகைமிக அதிகமாக இருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்துகொண்டு இருக்கிறோம். உலகத்திலே இருந்து வருகிறவர்களுக்கு இந்தியாவிலேஎன்ன இருக்கிறது என்று கேட்டால், காஷ்மீரம் இருக்கிறது. அதற்கு அடுத்து தாஜ்மஹால் இருக்கிறது என்று மாத்திரம் சொல்லுகிற அளவில், நாம் இந்தியாவினுடைய சிறப்பை எடுத்துக் காட்டுவதற்கு தாஜ்மஹாலை இன்றைக்குப் பயன்படுத்திக்கொண்டு வருகிறோம். அந்த தாஜ்மகாலை அந்த மன்னன் ஏன் எழுப்பினான் என்கிற கேள்வியை ஒரு பக்கத்திலே வைத்து நம்முடைய இராஜராஜன் இந்தப் பெரிய ஆலயத்தை ஏன் எழுப்பினான் என்கிற கேள்வியையும் பக்கத்திலே வைத்து இரண்டிற்கும் பதிலைக் கண்டுபிடிக்கிற முயற்சியை ஆராய்ச்சியாளர்கள் மேற்கொள்வார்களேயானால், தமிழனுடைய மிகச்சிறந்த பண்பும், தமிழனுடைய மிகச்சிறந்த உயர்வும் நம்முடைய ஆராய்ச்சியாளர்களுக்கு விடையாகக் கிடைக்கும் என்பதிலே எனக்கு ஐயம் இல்லை. நம்முடைய தாஜ்மகால் அவன் காதலித்த மனைவிக்கு நினைவாக எழுப்பப்பட்ட ஒரு மண்டபம் ஆகும்; மாளிகையாகும். அனால் இங்கே எழுந்து நிற்கின்ற இந்த ஆலயம் நம்முடைய இராஜராஜனுடைய காதலிக்காக எழுப்பப்பட்டது அல்ல. அவனுடைய மனைவிக்காகக் கட்டப்பட்டதும் அல்ல. அல்லது அவனுடைய பெற்றோர்களுக்காக ஆக்கப்பட்டதும் அல்ல. இந்த நாட்டினுடைய பண்பாட்டை, இந்த நாட்டினுடைய மதிப்பை, இந்த நாட்டினுடைய உயர்வை உலகத்திற்கு எடுத்துச் சொல்லுவதற்காக மிக உயர்ந்த விமானத்தைக் கொண்ட இந்த ஆலயத்தை அன்றைக்கே அவன் எழுப்பிச் சென்றிருக்கிறான். இங்கே ஆண்டவனை மாத்திரம்அவன் படைத்துவிட்டுச் செல்லவில்லை. ஆவுடையாரை மாத்திரம் பெரிய ஆவுடையராகஇங்கே அமைத்துவிட்டுச் செல்லவில்லை. நந்தியை மாத்திரம் பெரிய நந்தியாக ஒரே கல்லிலே செதுக்கப்பட்ட நந்தியாக அவன் வடித்துச் செல்லவில்லை. இந்த ஆலயம் என்பது ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே வாழ்ந்த தமிழ்மக்கள், தமிழர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்கிற அந்தச்சிறப்பை-வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு வரலாற்றுப் பெட்டகமாக இந்த ஆலயத்தை அமைத்து விட்டுச் சென்றிருக்கிறான் என்கிற பெருமை தான் இராஜராஜன் கட்டிய இந்த ஆலயத்திற்கு இருக்கின்ற மிகச்சிறந்த பெருமையாகும்.


## இராஜராஜன் ஆட்சிக்கு வந்த விழாவே சதய விழா

பல ஆலயங்களுடைய வரலாறு இன்றைக்கும் நமக்குக் கிடைக்கவில்லை. காஞ்சியிலே ஏகாம்பரநாதர் ஆலயத்திற்கு உள்ளே சென்றால் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே அவ்வாலயம் கட்டப்பட்டது என்பது தெரியவில்லை. அங்கே இருக்கிற மாமரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலே தோன்றிய மரம் என்கிறார்கள். ஆனால் அதற்கும் நமக்குச் சான்றுகள் இல்லை. ஆனால் இந்த ஆலயம் என்பது ஆலயத்தினோடு மாத்திரம் நிற்கவில்லை. தமிழருடைய வரலாற்றையும் இதிலே குறித்துவிட்டுச் சென்றிருக்கிறான். அப்படிப்பட்ட மிகச்சிறந்த வரலாற்றுச் சின்னமாக விளங்குகின்ற ஆலயத்தை நாம் பாதுகாத்து அதைப் போற்றிக் காக்க இன்றைக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பது மாத்திரம் அல்ல; தமிழனுடைய பெருமையை உலகத்திற்கு உணர்த்திய இராஜராஜனை நினைவு கூருகின்ற அந்த வகையிலேயும் நன்றி மறவாதவர்கள் தமிழர்கள் என்பதும், தம்முடைய முன்னோர்களை மறக்காதவர்கள் தமிழர்கள் என்பதும் இன்றைக்கு நாம் நினைவுப்படுத்துவதற்குத்தான் இந்தச் சதய விழாவைக்கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். சதயவிழா என்பது அவனுடைய பிறந்தநாளா அல்லது அவன் ஆட்சிக் கட்டிலிலே ஏறிய நாளா என்பது சரியாகத் தெரியவில்லை. அறிஞர்கள் எல்லாம் அவனுடைய பிறந்த நட்சத்திரம் என்றுகுறித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவன் ஆட்சிக் கட்டிலிலே ஏறி இன்றைக்கு 1,000 ஆண்டுகள் ஆகின்றன என்பதற்கு வரலாறு இருக்கிறது. ஆனால் எப்போது பிறந்தான் என்பதற்கு வரலாறு இல்லை. அவன் பிறந்தது சதய நட்சத்திரமா அல்லது அவன் ஆட்சி கட்டிலிலே

ஏறியது சதய நட்சத்திரமா என்பது தெரிய வில்லை. ஆனால் அவன் பிறந்த நாளைைக் கொண்டாடியிருப்பானா என்பதை இராஜ ராஜனுடைய வரலாற்றைப் பார்க்கிறவர்கள் சந்தேகிக்காமல் இருக்க முடியாது. காரணம் அவன் தன்னுடைய வாழ்க்கையை முன்னாலே வைத்து, மக்களிடத்திலே அவனுடைய உணர்வை வெளிப்படுத்தவில்லை. அவன் செய்திருக்கிற காரியங்கள் மிகப் பெரிய காரி யங்கள். அவன் அடைந்திருக்கிற வெற்றிகள் தமிழக வரலாற்றிலே யாரும் அடையாத வெற்றிகள். அவன் வகுத்திருக்கின்ற அரசியல் திட்டங்கள் அவனுக்குப் பின்னாலும் வழி காட்டக்கூடிய - முன்னோடியாகவிளங்கக்கூடிய திட்டங்கள். ஆகவே, அத்தனையும் நான்தான் செய்தேன் என்பதாக இராஜராஜன் எங்கே பற்றி எதையுமே குறிப்பிடவில்லை. ஆகவே, சதயவிழா என்பது அவன் ஆட்சிப் பொறுப் புக்கு வந்தநாளாக இருக்கலாம் என்கிற கணக்குத்தான் நமக்குக் கிடைக்கிறது.

## பொற்கால சாதனைகளுக்கு ஆயிரமாவது ஆண்டு:


ஆகவே அவன் ஆட்சிப்பொறுப்பை ஏற்று ஆயிரம் ஆண்டுகள் நிறைவு பெற்று இருக்கின் றன. இராஜராஜசோழன் ஆட்சிப்பொறுப்பை ஏற்று ஆயிரம் ஆண்டுகள் என்று மாத்திரம் அந்தக் கணக்கு சொல்லவில்லை. தமிழ்நாடே தலை நிமிர்ந்து நின்ற காலம் அந்தப் பொற் காலம் இருக்கிறதே! அந்தப் பொற்காலத்திற்கு இன்றைக்கு ஆயிரமாவது ஆண்டு நடக்கிறது



தஞ்சைப் பெரியகோயில்

யாவது சொல்லியிருக்கின்றானா என்றால் அப்படிப்பட்ட ஒரு வரிகூட இந்தக் கல்வெட்டுக் களிலே இல்லை. ஆகவே, அப்படி ஒரு பொது நோக்கத்தோடு சமுதாயத்திற்காக வாழ்ந்த ஒரு மாமன்னன் தன்னுடைய பிறந்தநாளை விழாவாகக் கொண்டாடியிருப்பானா என்பது ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள் ஆராய்தற் குரிய ஒரு மிகச்சிறந்த விஷயம் என்பதை மாத் திரம் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இராஜ ராஜசோழனுடைய கல்வெட்டுக்கள் ஒவ்வொன் றையும் பார்க்கிற எனக்கு அவன் தன்னைப் என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறது. அப்படி அந்த இராஜஇராஜசோழனுடைய சதய விழா வைக் கொண்டாடுகிற நேரத்தில், அவனும் தான் கட்டிய ஆலயத்திலே அந்த விழாவை வைத்துக் கொண்டாடியிருக்கிறான். அவன் ஆலயத்திலே அந்த சதய நாளில் வந்து காலை யிலே வணங்குகிறான். தனக்காக வணங்க வில்லை. இந்த நாட்டுமக்களுக்காக வணங்கு கிறான். தன்னுடைய ஆயுளை நீட்டித்துத்தர வேண்டும் என்பதற்காக வணங்கவில்லை. நாட்டு மக்களுடைய வாழ்விற்காக வணங்கு கிறான். நாட்டு மக்களுடைய வாழ்விற்காக

அவன் ஆட்சி செலுத்துகிறான். அப்படி ஒரு வேளை அவன் தன்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று கருதுகின்றவனாக இருந்தால் அவன் தன்னுடைய சித்தப்பாவுக்காக 15 ஆண்டுக்காலம் ஆட்சிப்பொறுப்பைக் கொடுத்துவிட்டு காத்துக் கொண்டிருந்து இருக்கமாட்டான். வரலாற்றிலே அப்படிப்பட்ட எடுத்துக்காட்டான சம்பவங்கள் காணக் கிடைக்கவில்லை. மாமன்னர்களுடைய வரலாறுகளை நாம் பார்க்கிறோம். அப்பனைக் கொன்று விட்டுப் பட்டத்திற்கு வந்த மகன் இருக்கிறான். மகனைச் சிறையிலே போட்ட தந்தை இருக்கிறான். விஷம் கொடுத்துச் சாகடித்தவன் இருக்கிறான். தம்பியைக் கொன்றவன் இருக்கிறான். அண்ணனைக் கொன்றவன் இருக்கிறான். இவர்கள் எல்லாம் மாமன்னர்களாகப் போற்றப்படுகிறார்கள். உலகத்திலே எந்த ஒரு மாமன்னனும் வீரன் என்று ஒருவன் பெயர் எடுத்திருப்பானே யானால் பண்பற்றவன் என்றும் அவன் பக்கத்திலேயே அவனுக்கு ஒரு பட்டம் இருக்கும். பல நாடுகளை வென்றவன் என்ற பெயர் இருக்குமானால் பலரை வஞ்சித்தவன் என்றும் பெயர் இருக்கும். அவனுக்கு வீராதிவீரன் சூராதிசூரன் என்ற பட்டம் இருக்குமேயானால் அவன் பல்வேறு குணங்களிலே குணக்கேடனாக இருந்தவன் என்ற சிறப்புகள் எல்லாம் அவனிடத்திலே இருக்கும். இராஜராஜனைப் பொறுத்தவரை வீரன் என்று பார்க்கிறோம். அதற்குப் பக்கத்திலே வேறு மாறான கருத்திற்குச் சான்றே இல்லை. பண்பாளன் என்று பார்க்கிறோம். அதற்குப் பக்கத்திலே அவன் பண்பு கெட்டவன் என்பதற்கு சான்றுகளே இல்லை. அவன் தயாள குணம் கொண்டவன் என்று பார்க்கிறோம். அதற்குப் பக்கத்திலே அவன் தயாள குணம் அற்றவன் என்பதற்குச் சான்றுகளே இல்லை. அரசியலில் அவன் வழிகாட்டியாக இருந்திருக்கிறான் என்றும் பார்க்கிறோம். அரசியல் என்பது இதயத்தைக் கழற்றி வைத்து விட்ட இரும்பு இதயம் படைத்தவர்களுக்குத்தான் அரசியல் என்று இருந்த அந்த இலக்கணத்தையே மாற்றி காட்டியவன் இராஜராஜன். அரசியலிலே ஏற்று கொண்டிருந்த பொறுப்பிலே கலையுணர்வோடு அவன் இருந்திருக்கிறான். பெண்களை மதிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறான். கலைஞர்களை வாழ்த்தியிருக்கிறான். பாராட்டியிருக்கிறான். ஆகவே, அவன் தொடாத துறைகளே இல்லை. இன்றைக்குத் தஞ்சை மண்ணிலே பாய்ந்து கொண்டிருக்கிற காவிரியினுடைய பல்வேறு கிளைகள், சிலந்தி வலைகளைப் போல-சிலந்தி எப்படி கால்களை விரித்துக்கொண்டிருக்கிறதோ அதைப் போலப் பாசனத்திற்காகக் கால்வாய்களை அவன் வெட்டிச் சென்றிருக்கிற அந்த அற்புதத்தைப் பார்க்கிற நேரத்தில் நீர்ப் பாசனத்துறையிலும் இராஜராஜன் சிறந்து விளங்கியிருக்கிறான் என்பதையும் நம்மாலே பார்க்க முடிகிறது. வருவாய்த்துறை நிர்வாகத்திலே அவன் செய்திருக்கிற எத்தனையோ திட்டவட்டமான நடவடிக்கைகள் - சீர்திருத்தங்களை எல்லாம் நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இங்கே மிகச் சிறப்பாக எடுத்துரைத்தார்கள். ஆகவே அவனுடைய கல்வெட்டுக்கள் எல்லாம் இந்த நாட்டிலே நடைபெற்றிருக்கின்ற மிகச்சிறந்த வரலாறுகளை எடுத்துத் தருகின்ற குறிப்புகளாக இருப்பதையும் நாம் பார்க்கிறோம்.



தாஜ் மகால்

## பழையவற்றை நினைத்தால்தான் புதிய சாதனைகளுக்கே ஆரம்பம் கிடைக்கும்

இவ்வளவு சிறந்த இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசி காலத்திலே கூட இப்படிப்பட்ட கட்டிடக்கலை வளர்ச்சி இன்றைக்கு ஏற்படவில்லை என்பதை நாம் நிச்சயம் உறுதி

யாக கூற முடியும். உலகம் போற்றக்கூடிய விஞ்ஞானிகள் எல்லோருமே வந்து பார்த்து 216 அடி உயரம் உள்ள இந்த விமானத்திற்கு அஸ்திவாரமாக 5 அடி மாத்திரமே அவன் போட்டு இருக்கிறான்; அவன் எப்படி போட்டான் என்பதை இன்றைக்கு ஆச்சரியத்தோடு ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். நாம்தான் இன்றைக்கு நம்முடைய முன்னோர்களை மறந்துவிட்டு, வெளிநாடுகளைப் பார்த்துப் புகழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய முன்னோர்கள் எவ்வளவு சிறந்த அறிஞர்களாக வாழ்ந்தார்கள் என்பதைநினைவுபடுத்துவதற்காகத்தான் இன்றைக்கு நாம் இந்தச் சதய விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இங்கே கடந்த சில ஆண்டுகளைவிட இங்கே கூடுகிற மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். மக்களுக்கு இன்றைக்குப் புதிய உற்சாகமே தோன்றியிருப்பதை நாம் பார்க்கிறோம். ஏதோ பழைய காலத்து மன்னர்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதிலே, பழங்கதைகள் பேசுவதிலே என்ன பயன் என்று கூட சிலர் நினைக்கலாம். சில நேரத்தில் பழங்கதைகளைப் பேசினால்தான் புதிய கதைக்கே நமக்கு ஆரம்பம் கிடைக்கும். பழையவற்றை நினைக்காமல் இருந்தால், புதிதுக்குத் தொடக்கமே இருக்காது. ஆகவே பழையதை நினைத்தால்தான் புதிதுக்கே நாம் தொடக்கம் ஏற்படுத்த முடியும். இராஜராஜனை நினைக்காமல் நாம் என்ன புதிய கருத்தைத் தொடங்கி விட முடியும் என்பதையும் நாம் இந்த நேரத்திலே எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

## மோர்விற்ற பெண்மணிக்கும் சிறப்பினை செய்தவன் இராஜராஜன்

இந்தத் தஞ்சைப் பெருவுடையார் ஆலயம் இராஜராஜன் என்ற பேரரசனுடைய முயற்சியினாலே கட்டப்பட்டது. அவனுடைய ஆதிபத்திய உரிமையினாலே கட்டப்பட்டது. அப்படியிருந்தும் இராஜராஜன் தன்னுடைய முயற்சியினாலே இவ்வாலயம் எழுப்பப்பட்டது என்பதை எங்கேயாவது குறித்திருக்கிறானா என்றால் அருள்கூர்ந்து நீங்கள் அதைப் புரிந்து கொண்டாக வேண்டும். இந்த ஆலயம் தன்னால் எழுப்பப்பட்டது என்பதைக் கூறாமல் தானும் தன்னைச் சார்ந்தவர்களும் கொடுத்த கொடையை மட்டுமே அவன் கல்லிலே வெட்டி சென்றிருக்கிறான். 'யாம் கொடுத்தனவும், அக்கன் கொடுத்தனவும், நம் பெண்டுகள் கொடுத்தனவும், மற்றும் கொடுத்தார் கொடுத்தனவும் கல்லிலே வெட்டுக'' என்றுதான் குறித்திருக்கிறான். நானும் கொடுத்திருக்கிறேன். நம்முடைய சுற்றத்தாரும்கொடுத்திருக்கிறார்கள். எங்களுடைய பெண்டு பிள்ளைகள் கொடுத்திருக்கிறார்கள். இவைகள் அனைத்தையும் இந்த ஆலயக்கல்லிலே பொறுத்திடுக என்பதாகக் கூறி அவற்றைப் பொறித்திருக்கிறான். அப்படிக் கல்லிலே பொறிக்கச் செய்திருக்கிறானே! யார் யாரோ கொடுத்தது என்று, அதிலே யார் யார் கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா? ஒரு மோர் விற்கிற பெண்மணி, அந்த அம்மையார் கேட்கிறார். 'இந்த ஆலயம் கட்டுகிற திருப்பணியிலே எனக்கு என்ன பங்கு?' என்று கேட்டு 'என்னுடைய வீட்டிலே ஒரு கல் கிடக்கிறது. அந்தக் கல்லைக் கொண்டு போய் இந்தக் கற்கோயிலிலே வைத்துவிடுங்கள்'' என்று மோர் விற்கிற பாட்டி சொல்கிறார். அந்தக் கல் விமானத்துக்கு மேலே விதானத்திலே இடம் பெற்றிருக்கிறது. இப்படி இந்த ஆலயம் எழுப்பப்பட்டிருக்கிறது என்பதை அருள்கூர்ந்து நாம் உணர்ந்தாக வேண்டும்.

## தாஜ்மகாலைவிட தஞ்சைப் பெரிய கோயிலே உயர்ந்தது

இரஷ்யாவின் முன்னாள் பொதுவுடமை செயலாளராக இருந்த குருஷேவ் வருகிறார் இந்தியாவிற்கு. அவருக்குத் தாஜ்மகாலைக் கொண்டுபோய் காட்டுகிறார்கள். தாஜ்மகால் தானே நமக்குக் காட்டுவதற்கு உள்ள ஒரே இடம். ஏனென்றால் தஞ்சைப் பெரிய கோயில் இருப்பது இந்தியாவில் இன்னும் பல பேருக்குத் தெரியாது. காரணம் வடக்கே இருக்கிற காரணத்தினாலே தாஜ்மகால் தெரிகிறது. தாஜ்மகால் பளபளக்கும் பளிங்குக் கற்களினால் கட்டப்பட்டது தான். ஆனால் இப்படிப்பட்ட அழியாத கற்களினாலே கட்டப்பட்டது அல்ல. அந்தப் பளபளக்கும் பளிங்குக்கல் மாளிகையை பார்த்துவிட்டு குருஷேவ் சொல்லுகிறார். அவர் பொதுவுடமைவாதி அல்லவா! அவர் பொதுவுடைமை கட்சியினுடைய பொதுச் செயலாளர் அல்லவா! அவர் உடனே சொல்லுகிறார்! இந்தத் தாஜ்மகாலை எத்தனைஆயிரக் கணக்கான தொழிலாளர்கள்கட்டியிருப்பார்கள் என்பதுதான் என் மனக்கண் முன்னால் தெரிகிறது என்று அவர் சொல்லுகிறார். அவரை இந்தத் தஞ்சைப் பெரிய கோயிலுக்கும் கூட்டி வந்து காட்டியிருப்பார்கள் ஆனால் ஒரு மோர் விற்கிற பெண், தன்னுடைய பங்காகத்தந்த ஒரு கல்லும் கூட இந்த ஆலயத் திருப்பணியில் சேர்க்கப்பட்டிருக்கிற அதை அவர் தெரிந்து இராஜராஜனுடைய பொதுவுடமைக்குணத்தை மிக நினைந்து பாராட்டியிருப்பார் அல்லவா! அதை எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பை இந்திய அரசோ அல்லது அரசில் இருக்கிற பெரியவர்களோ இழந்து விட்டார்கள். காரணம் தஞ்சைப் பெரியகோயில் தமிழகத்திலே இருக்கிறது. நான் பல நேரங்களிலே சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் சொல்கிறேன். உலகத்திலே இருக்கின்ற விற்பன்னர்களை எல்லாம் கொண்டு வந்து காட்டுங்கள். தாஜ்மகாலையும் காட்டுங்கள். தஞ்சைப் பெரிய கோயிலையும் காட்டுங்கள். தாஜ்மகாலைவிட தஞ்சைப் பெரிய கோயிலே உயர்ந்தது என்று

அந்த விற்பன்னர்கள் சொல்லுகிறார்களா
இல்லையா என்று பாருங்கள். ஏதோ தமிழகத்
திலே இருக்கிறது என்பதற்காக நான் தஞ்சைப்
பெரிய கோயிலுக்காகப் பரிந்து பேசவில்லை.
'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்ற
அந்தத் தற்பெருமைக்காக நான் சொல்ல
வில்லை. 300 ஆண்டுகளுக்கு முன்னாலே
அல்லது 200 ஆண்டுகளுக்கு முன்னாலே விஞ்
ஞானம் வளர்ந்திருக்கின்ற காலத்திலே கட்டப்
பட்டது தாஜ்மகால். ஆயிரம் ஆண்டுகளுக்கு
முன்னாலே எழுப்பப்பட்டது தஞ்சைப் பெரிய
கோயில். 5 அடி அஸ்திவாரத்தைப் போட்டு
216 அடி உயரமுள்ள விமானத்தை எழுப்ப
முடியும் என்று காட்டிய அந்தக் கட்டிடக்கலை
நிபுணன் தமிழகத்திலே இருந்திருக்கிறான்.
அவன் ரோம் நாட்டிலே இருந்து வரவில்லை.
இங்கிலாந்து நாட்டிலே இருந்து வரவில்லை.
பிரான்சு நாட்டிலே இருந்து வரவில்லை. நம்
முடைய தமிழகத்திலே வாழ்ந்த தலை சிறந்த
கட்டிடக்கலை நிபுணர்கள்தான் வானளாவிய
தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியிருக்
கிறார்கள் என்பதை நாம் உலகிற்கு தலை
நிமிர்ந்து கூறமுடியும்.

## இராஜராஜன் தந்துசென்ற மானியங்கள்

இன்றைக்கு அவன் இந்த ஆலயத்தை
எழுப்பி என்றென்றைக்கும் இந்த ஆலயம்
நிலைக்க வேண்டுமே என்று எண்ணி இதற்
கென்று எவ்வளவு மானியங்களை விட்டுச்
சென்றிருக்கிறான் என்று எண்ணுகிறீர்கள்.
காரணம் அன்றைக்கு இருந்த அரசர்களுக்குத்
தெரிந்திருக்கிறது. தென் காசியிலே அந்த ஆல
யத்தை எழுப்பிய அந்தப்பராக்கிரம பாண்டி
யன் கல்வெட்டிலே பொறித்துச் சென்றிருக்
கிறான். இந்த ஆலயத்தை நான் கட்டி முடித்தி
ருக்கிறேன். எதிர்காலத்திலே இந்த ஆலயத்
திற்கு ஏதேனும் ஊனம் எற்பட்டால் திருப்பணி
செய்ய யார் முன்வருகிறார்களோ அவர்களு
டைய பாதத்தை என் தலைமேல் வைத்து
வணங்குவேன் என்று பொறித்து விட்டுச் சென்
றிருக்கிறான். அவனுக்குத் தெரிந்திருக்கிறது,
எதிர்காலத்திலே இந்த ஆலயங்களை எழுப்ப
வும் முடியாது. இந்த ஆலயங்களைப் பாது
காப்பதும் கடினம் என்பது தெரிந்திருக்கிறது.
ஒரு மதில் சுவரைக் கட்ட நம்மாலே முடிய
வில்லை. பல மதில் சுவர்கள் இடிந்து கிடக்
கின்றன. அவற்றை எழுப்ப நம்மாலே முடிய
வில்லை. ஆகவே தான் இராஜராஜன் இந்த
ஆலயம் நின்று நிலைத்துச் சிறப்புற்று விளங்க
வேண்டும் என்பதற்கு எவ்வளவு மானியங்களை
விட்டுச் சென்றிருக்கிறான் என்பதையும் நான்
சொல்லுகிறேன். இன்றைக்கு அந்த மானியங்
களின் நிலை என்ன என்பதையும்நான் சொல்லு
கின்றேன். ஏனென்றால் நான் அறநிலையத்
துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற
ஒரு அமைச்சன் என்கிற முறையில், பார்க்கிற
பொழுது கண்ணிலே கண்ணீர் வரக்கூடிய ஒரு
துரதிர்ஷ்ட நிலையிலே இந்தச் சமுதாயம்
இருக்கிறது. இராஜராஜன் இந்த ஆலயத்தை
எழுப்பிச் சும்மா உங்கள் கைகளிலே விட்டு
விட்டுச் செல்லவில்லை. 216 அடி விமான
முள்ள கற்கோயிலை எழுப்பிவிட்டுச் சென்ற
வன், எவ்வளவு தந்துவிட்டு சென்றான் தெரி
யுமா? முப்பத்தோராயிரத்து ஐநூற்று ஐம்பத்
தொன்பது கழஞ்சு எடையுள்ள பொற்கலங்கள்;
ஐம்பதாயிரத்து அறுநூற்றைம்பது கழஞ்சு
எடையுள்ள வெள்ளிக்கலங்கள்; அணிகலன்
களோ பத்தாயிரத்து இருநூறு கழஞ்சு மதிப்
புடையவை. இவையன்றி ஒரு இலட்சத்துப்
பதினாறாயிரம் கலம் நெல் வருவாயுள்ள கிரா
மங்கள். ஒரு இலட்சத்துப் பதினாறாயிரம்
கலம்; நெல் அதாவது ஒரு சாகுபடி. ஒரு சாகு
படிக்கு 1,16,000 கலம் என்றால் இன்றைய
விலையிலே 50 இலட்சம் ரூபாய். இன்றைக்குத்
தஞ்சையிலே 2 சாகுபடி; எத்தனை இலட்சம்
கணக்குப்பாருங்கள். அதுமட்டுமல்ல, ஏறத்
தாழ ஒரு டன் அளவுக்குத்தங்க நகைகள்.
இவ்வளவையும் விட்டுச் சென்றானே, அது
யாரிடத்திலே இருக்கிறது? இது ராஜராஜன்
விட்டுச் சென்ற கணக்கு. ஆனால் இன்றைக்கு
என்ன கணக்கு? இன்றைக்கு என்ன மிஞ்சி
யிருக்கிறதென்றால் நஞ்சைநிலம் 913 ஏக்கர்.
புஞ்சை நிலம் 131 ஏக்கர். சரி, இதுவாவது
மிஞ்சியிருக்கிறதே! இதிலிருந்து வருமானம்
வருகிறதா என்றால் நமக்கு வரவேண்டிய கலம்
11,882 கலம். நான் முன்னாலே படித்தது
1,16,000 கலம். இன்றைக்குக் கழுதைதேய்ந்து
கட்டெறும்பாகிய கலம் 11,882 கலம். இந்த
11,882 கலமும் கூட இன்றைக்கு ஆலயத்திற்குக்
கிடைக்கிறதா என்றால் இல்லை என்பதைத்
தான் இராஜராஜனுடைய சதய விழாவைக்
கொண்டாடுகிற நேரத்திலே தெரிவிக்க நான்
கடமைப்பட்டிருக்கிறேன். இதை நீங்கள்
தெரிந்து கொண்டாகவேண்டும்.

அப்படிப்பட்ட மாமன்னன் இங்கே இருக்
கின்ற இராஜராஜனுடைய சிலைக்கு ஒரு சிறிய
விமானத்தை அமைக்க வேண்டும் என்று நான்
ஸ்தபதிகளிடத்திலே கணக்கைக் கேட்டேன்.
அவர்கள் அந்தக் கணக்கையெல்லாம் போட்டு
32 அடி உயரத்திலே ஒரு விமானத்தை நாம்
அமைக்க வேண்டுமானால் - ஒரு கல்லிலேயே
அமைக்க வேண்டுமானால் சுமார் 30 இலட்ச
ரூபாய் செலவாகும் என்று மூன்றாண்டுகளுக்கு
முன்னாலே சொன்னார்கள். இன்றைக்குக் கேட்
டால் அது எத்தனை லட்சம் ஆகுமோ தெரி
யாது. 32 அடிக்கே 30 இலட்சம் என்றால்
216 அடிக்கு எழுப்பியிருக்கிறானே! எத்தனை
கோடிகள் செலவாகியிருக்கும் என்பதை அருள்
கூர்ந்து எண்ணிப்பாருங்கள். 32 அடி விமானத்
திற்கு 30 இலட்ச ரூபாய் செலவு செய்ய
முடியாமல், நாம் இன்றைக்குத் திண்டாடிக்
கொண்டிருக்கிறோம்.

## அப்படியும் இருக்கிறது இப்படியும் இருக்கிறது

இந்தத் தஞ்சைப் பெரிய கோயில் உள்ளிட்ட 88 கோயில்களுக்கு ஒரே ஒருவர் பரம்பரைத் தருமகர்த்தா. அவர் ஆலயத்தைநல்ல முறையில் நிர்வகிக்கிறாரா? அரசினுடைய அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு செயல்படுகிறாரா என்றால் அதுவும் இல்லை. மாறாக அரசு இந்த ஆலய நிர்வாகத்திலே தலையிடக் கூடாது என்று போய் வழக்கு மன்றங்களிலே முறையீடு செய்கிறார்கள்! இப்படி இருந்தால் எப்படி ஆலயங்களைப் பாதுகாப்பது? எப்படி ஆலயங்களை நாம் நிர்வகிப்பது? எப்படி ஆலயங்களைப் புதுப்பிப்பது? நல்லவேளை! இராஜராஜன் இந்த ஆலயத்தைக் கல்லாலே எழுப்பிவிட்டுச் சென்றான்! அதனாலே புதுப்பிக்க வேண்டிய வேலை நமக்கு ஏற்படவில்லை. திருத்தணி சுப்பிரமணியசுவாமி ஆலயம் உங்களுக்குத் தெரியும். அந்த ஆலயத்திற்குச் சென்றால் இனிமேல் பாருங்கள்! முருகனுடைய கழுத்திலே ஒரு திருவாட்சி மாலை இருக்கிறது. பொன்னாலே செய்யப்பட்டது. பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள அந்தத்திருவாட்சி மாலையைக் கொடுத்தவர் ஒரு ஜமீன்தார். அந்த ஜமீன்தார் ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலே ஜமீனை இழந்துவிட்டார். அவர் கொடுத்த அந்த திருவாட்சி மாலையைப் பாருங்கள்! எத்தனை திருவாட்சிகள் உள்ள மாலை! எத்தனை சவரன்! எத்தனை இலட்சம் மதிப்புள்ளது. இன்னும் பல வைர நகைகள்! இவ்வளவும் அந்தத் திருத்தணி ஆலயத்திற்குத் தந்தவர் ஒரு ஜமீன்தார். அந்த ஜமீன்தாரிடம் இருந்து அரசாங்கம், சட்டத்தின் மூலம் சொத்துக்களை எடுத்துக்கொண்டுவிட்டது. அவருடைய மனைவி இன்றைக்குச் சாப்பாட்டுக்கு இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு முறை நான் திருத்தணி போனபோது அந்த அம்மையார் சுவாமியைத் தரிசனம் செய்ய வந்தார்கள். இவர்கள் தான் அந்தத் திருவாட்சி மாலையைத் தந்த ஜமீன்தாருடைய மனைவி என்று அறிவித்தார்கள். அவர்களுடைய சாப்பாட்டிற்கு வழிஇல்லை. இந்த ஆலயத்திலிருந்து மாதம் 100 ரூபாய் தந்து கொண்டிருக்கிறோம் என்றார்கள். அதை இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய அனுமதியோடு 500 ரூபாய் ஆக உயர்த்தி அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் ஆலயத்திற்கு வருகின்ற நேரத்தில் அவர்களுக்கு எல்லா மரியாதையும் செய்ய வேண்டும் என்றும் உத்திரவிட்டிருக்கிறோம். ஆகவே அப்படி ஆலயத்திற்காகச் சொத்துக்களைக் கொடுத்தவர்கள் வாடுகிற நிலையும் ஒருபுறம் இருக்கிறது. ஆலயத்திற்கென ஒன்றுமே செய்யாதவர்கள், ஆலயச்சொத்துக்களை அபகரித்துக்கொண்டு நீதி மன்றங்களுக்கு போகக்கூடிய இப்படிப்பட்ட நிலையும் இன்னொருபுறம் இருக்கிறது.

## தடைகளைத் தகர்த்து முன்னேறுகிறோம்

நான் மக்கள் மன்றத்திலே இதை வைப்பதற்குக் காரணமே நீதிமன்றம் என்று நீதி மன்றத்தின் படிக்கட்டுக்களிலே ஏறி, இன்றைக்கு இந்த நாட்டிலே நல்ல பல செயல்களையும் தடுத்துவிட முடியும் என்ற தைரியம் எல்லாத் துறைகளிலுமே வந்திருக்கிறது. குறிப்பாக அறநிலையத்துறையில் ஆலயச் சொத்துக்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் நீதிமன்றங்களை நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். இராஜராஜன் எவ்வளவு சொத்துக்களை விட்டுச் சென்றான். அவனுடைய விழாவைக் கொண்டாடுகின்ற நமக்கு இலட்சத்திலே அல்லது கோடியிலே ஒரு பங்காவது பொது உணர்வு வேண்டுமா, வேண்டாமா என்பதை நீங்கள் அருள்கூர்ந்து எண்ணிப்பாருங்கள்! இராஜராஜன் அன்றைக்கே ஜனநாயகத்திற்கு வழி வகுத்தவன்; நிர்வாகச் சீர்திருத்தங்கள் புரிந்தவன், மாபெரும் வீரனாகத் திகழ்ந்தவன். கடலைக் கடந்தவன்; மொழியைக் காப்பாற்றியவன். தமிழருடைய புகழை உலகெங்கும் பரப்பியவன். அப்படிப்பட்ட இராஜராஜசோழனின் சதய விழாவை ஆண்டுதோறும் கொண்டாடுவதன் மூலம் பல ஆக்கப்பூர்வமான திட்டங்கள் உதயம் ஆகும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்து, தடைகளையும் மீறி நம்முடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே ஆன்மீகத்துறை தழைத்தோங்கி வருகிறது. இன்றைக்கு மக்கள் அறநிலையத் துறையின் செயல்முறைகளைக் கண்டுவாழ்த்தி பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பாராட்டுதல்கள் மேலும் குவியும் வண்ணம் செயல்பட்டு வருகிறோம்; வருவோம் என்ற என் உறுதியையும் தெரிவித்து, நன்றி கூறி, விடைபெற்றுக்கொள்கிறேன்.

வணக்கம்.


# பழநித் தல வரலாறு


படிக்கின்றிலை பழனித்திருநாமம்
படிப்பவர்தாள்
முடிக்கின்றிலை முருகா என்கிலை
முசியாமலிட்டு
மிடிக்கின்றலை பரமானந்த மேற்கொள
விம்மிவிம்மி
நடிக்கின்றிலை நெஞ்சமே தஞ்சமேது
நமக்கினியே
—கந்தரலங்காரம்

முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால்
எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.
—திருமுருகாற்றுப்படை வெண்பா.

**திருமலையின் சிறப்பு:**

திருவருள் ததும்பியது தமிழகம். இங்கு இறைவன் அருள் விளக்கம் மிகுதியும் பெற்ற திருத்தலங்கள் பல. அவற்றுள்ளே தொன்மைச் சேரனும், தென்னவனாகிய பாண்டியனும் ஒருங்கு போற்றிய கொங்குவைகாவூர் நாட்டுப் பழம்பதியாகிய பழனி காலவரையறைக்குட் படாத பழமையும், பெருமையுமுடையது. இன்னும், தமிழ் இலக்கியங்களில் ''சித்தன் வாழ்வு'' எனச் சிறப்பிக்கப் பெற்ற இத்தலம் சித்தர் போகரின் அருள் திருவிளையாடல்கள் நிகழ்ந்த இடமாகும். இங்கு அவரும் அவர் மாணவர் புலிப்பாணியும் இருந்தனர். இத் திருமலையின் மீது போகர் கருணையால் எடுப்பித்ததே ஞான தண்டாயுதபாணியின்





## அழகன் முருகனே!

பார்த்தபடி பார்த்திருக்கும் பேரழகு நீபடைத்தாய்
பார்த்துநிற்க இருவிழிகள் ஏன்கொடுத்தாய்
வேல்முருகா!
ஆயிரம்தான் விழிகொடுத்தால் அமுதமாகும்
உன்னழகை
அள்ளிஅள்ளிப் பருகிடுவேன் அனுதினமும்
நான்முருகா!
(பார்த்தபடி)

வாரிவாரி வழங்கிடவே ஈராறுகரம் உனக்கு
சேர்த்துஉன்னைத் தொழுதுநிற்க இருகரம்ஏன்
அடியவர்க்கு?
நூறுநூறு கரம்கொடுத்தும் உன்புகழாம் பெருங்
கடலை
யாரளப்பார் என்பதனால் இருகரமேகொடுத்தாயா?
(பார்த்தபடி)

குன்றுதோறும் குடியமர்ந்து குன்றாத வளம்
கண்டாய்
நினைத்தஇடம் விரைந்திடவும் நீலமயில் நீ
கொண்டாய்
பறந்துவந்துன் பதிகள்எல்லாம் பார்த்துருகப்
பற்றுத்தந்து
இருசிறகைத் தந்தனுப்ப மறந்துவிட்டாய்
திருமுருகா!
(பார்த்தபடி)

—டாக்டர் த. அமிர்தலிங்கம்

அருள் திருமேனியாகும். இக்காலம் கால வரையறையில் அகப்பட்டதன்று. அத்திரு மேனியைத் தரிசித்த பேறு, மக்களின் பிறவிப் பிணியை அகற்றி முத்திப் பெரும்பேற்றில் என்றும் ஈடுபடுத்துவது.

### திருமலையின் அமைப்பு:

பழனிப் பொருப்பினின்றும் சுமார் நான்கு கல் தூரத்தில் மேற்கு மலைத் தொடரின் ஒரு பகுதியாகிய கொடைக்கானல்மலையும்மற்றும் பல மலைத்தொடர்களும் பச்சைப்பசேலெனத் தோன்றி வெள்ளிய முகில்கள் மேலே தவழ் வனவாய் விளங்குகின்றன. இப்பழனிமலைக்கு சிறிது அணித்தே மற்றுமோர் சிறுகுன்று இடும் பன் மலை எனப்பெயர் பெற்று நிற்கின்றது. இவை கடல் மட்டத்திற்கு மேல் 1068 அடி உயர்ந்துள்ளவை. இதனையடுத்து இடும்பன் குளம் 147ஏ.61 செ. நிலப்பரப்புள்ளது. பழனி மலையின் உச்சியில் அதன் மணிமுடிபோல் முருகன் திருக்கோயில் விளங்குகின்றது.

### புராண வரலாறும், பழநிப் பெயர்க் காரணமும்

உமாதேவியாரும் சிவபிரானும் இளங் குழவியாகிய முருகனை ''ஞானப்பழம் நீ'' எனக் காதலோடு அழைத்தமை காரணமாக முருகன் வீற்றிருக்கும் இக்குன்றினுக்கும், இப் பதிக்கும் பெயர் ''பழம் நீ'' என வழங்கப் பெற்று, பின் அச்சொல் ''பழநி'' என வழங்க லாயிற்றென்பர்.

''பழமுணக் கொண்டு தம்பி
பாலனை ஆண்டி யாக்கிப்
பழமும்நீ ஆனாய் என்றே
பார்புகழ் குன்றம் சேர்த்தாய்''
(பழநிப்பாமலர்)

### காலவரையறை:

காலவரையறையில் பழனியம்பதி சங்க காலத்தை ஒட்டியது. திருமுருகாற்றுப்படை யில் திருவாவினன்குடி எனவும், அகநானூற்றில் 'முழவுறழ் திணிதோ ணெடுவேளாவி, பொன் னுடை நெடுநகர்ப்பொதினி' (அகம் 61) 'முரு கனற் போர் நெடு வேளாவி, யறுகோட்டி யானைப் பொதினி'' (அகம் 1) என இரண்டு இடத்தில் 'பொதினி' எனவும், சிலப்பதிகாரத்தில் அதன் அரசனை 'வேளா விக்கோ மாளிகை காட்டி'' (சிலப். 28-198) எனவும், இத்தலம் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. ஆதலின் இத்தலம் தமிழ் மூவேந்தர்களாலும், 12, 13, 14ம் நூற்றாண்டு களில் கொங்குச் சோழர்களாலும், விசயநகர ஆட்சியின் கீழ் மதுரை நாயக்க மன்னர்களா

லும் ஆளப்பெற்று, 18-ம் நூற்றாண்டில் மைசூர் அரசின் கீழ் திண்டுக்கல் மாகாணமாக 25 பாளையங்களில் ஒன்றாகவிருந்து 1792-ம் ஆண்டில் நான்காவது மைசூர்ப் போருக்குப் பின் ஆங்கில அரசின்கீழ் வந்ததாகும்.

## பழனித்தலம்:

பழனித்தலம் சேரர், கொங்கு நன்னாட்டைச் சேர்ந்ததன் காரணமாக முன்பு கோவை மாவட்டத்தின் பகுதியாக இருந்தது. பின்னர் இவ்வூர் மதுரை மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு பழனித்தாலுகா என்ற பகுதிக்குத் தலை நகராக விளங்கி வந்தது. 15-9-85 முதல் புதிதாக அமைக்கப்பட்ட ''அண்ணா மாவட்டத்தில்'' விளங்கி வருகின்றது. தென்இந்திய நேர் இருப்புப்பாதையில் திண்டுக்கல்லிலிருந்து போத்தனூர் கிளைப்பாதை பிரிந்து, பழனி வழியாக பாலக்காடு, கோயமுத்தூர் செல்லும் ரெயில் வசதியுள்ளது. இவ்வூரிலிருந்து கோவை மதுரை, கொடைக்கானல், கரூர், ஈரோடு, தாராபுரம், பாலக்காடு முதலிய பல இடங்களுக்கும் மோட்டார் வசதியுள்ளது. நாகர் கோயில், கோவை, சேலம், இராமநாதபுரம், தஞ்சை, குருவாயூர் முதலிய ஊர்கட்குச் செல்ல தமிழ்நாடு அரசு போக்குவரத்துவிரைவு வண்டி வசதிகள் உள்ளன.



ஸ்ரீ முருகக்கடவுள் தெய்வயானைஅம்மை திருமணம்.

## பழனி மலையும், இடும்பன் மலையும்:

**புராண வரலாறு** : பழனி மலையும் இடும்பன் மலையும், சிவகிரி சத்திகிரி எனக் கயிலாயத்திலிருந்ததாகவும், சிவபெருமான் அவைகளை அகத்திய முனிவருக்குக் கொடுக்க, அவைகளைப் பொதிகைக்குக் கொண்டு போக நினைந்து அவர் இடும்பாசுரனுக்கு ஆணையிட அவைகளைக் கொண்டு போகும் வழியில் களைப் படைந்து இப்போதிருக்கும் இடத்தில் இடும்பன் இறக்கி வைக்க அங்கு முருகன் கருணையால் இவ்விடமே பொருந்தியதென்றும், சிவகிரியின் மீது முருகன் கனிவாய்ச் சிறுவனாகக் குரா மரத்தின் கீழ்த்தோன்றவும், இடும்பனுக்கும் இளஞ்சேய்க்கும் போர் நிகழவும், அசுரன் உயிர் நீப்ப, இடும்பியின் முறையீட்டால் உயிர் மீண்டும் பெறவும், அவன் பெற்ற வரத்தால் ஆண்டவன் மலையில் இடும்பன் சந்நிதி என்ற இடத்தில்,வாயில் காவலனாக ஒரு இடம் பெற்றுத்தான் இரு மலைகளையும் எடுத்து வந்தது போன்று காவடியுடன் தமது பிரார்த்தனைகளைக் கொண்டு வரும் அடியார்கள் முருகன் அருள் பெற வேண்டுமென்ற பிரார்த்தனையும் கைவரப்பெற்றானென்பதும் புராணக் கூற்று.

## மலைக்கோயிலின் காலம்:

மலை மீதுள்ள பெருமானின் திருமேனியானது போக சித்தர் ஆக்கியதன் காரணமாக அக்காலம் நிர்ணயிக்க முடியாததாகின்றது. ஆயினும் அவர் கோயில் கொண்டருளும் திருக்கோயில் எடுப்பித்த காலத்தை மட்டும் சில சான்றுகளால் குறிக்கலாகும். போகரது கோயில் சேரநாட்டு மக்களது பேருணர்ச்சியையும், ஆர்வத்தையும் பெற்றது. ஆதலின் அந்நாட்டு அரசர் சேரமான் பெருமான் அதனைக் கண்டு உள்ளம் மகிழ்சிறப்ப இக்



## பாரதியார் டீ சாப்பிட்ட கடை

புதுச்சேரி கடைவீதியில் இருந்த ''காக்கா'' என்னும் முஸ்லீமுக்குச் சொந்தமான தேநீர்க்கடை தான் பாரதியார் டீ சாப்பிட்ட கடையாகும். தாம் பிராமணர் குலத்திலே பிறந்தவராயினும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவன்' என்றதிரு மூலர் நெறியிலே ஊறித்திளைத்த அவர் தம் நண்பர்கள் புடைசூழ காக்காவின் கடைக்குப்போய் 'டீ' கேட்பார். கண்ணாடி டம்ளரில் டீ வரும். அதை எல்லோரும் காண முகத்திற்கு நேரே தூக்கிப் பிடித்து,ரசித்து ரசித்துப் பருகுவார்.பாரதியாருக்கு முஸ்லீம், கிறித்து, இந்து, பிராமணன், அரிசன் என்ற பாகுபாடு என்றைக்குமே இருந்ததில்லை. ''காக்கை குருவி எங்கள் ஜாதி'' எனப் பாடியவர் காக்கா கடையில் டீ குடித்ததில் வியப்பிருக்க முடியுமா?

கோயிலை எடுப்பித்தார். மலை ஏறும்போது எதிர் நிற்கும் முதல் சிற்றாலயம் சேர விநாயகராகும். அதன் வாயிலிலுள்ள ஒரு தனிக் கற்சிலையில் சேரர்கோன் தன் குதிரை மீது விளங்குகின்றான். மலையின் மீது கருவறை வடபக்கத்துச் சுவற்றிலும் சேரர்கோன் தன் குதிரை மீது செல்லும் தோற்றம் பொறிக்கப்பட்டுள்ளது. தம்பிரான் தோழராகிய சுந்தர மூர்த்தி வெள்ளை யானையின் மீது கைலாயம் செல்ல, அவர் தோழராகிய இச்சேரமானே தமது குதிரையின் மீது அமர்ந்து அவரைப் பின்தொடர்ந்து சென்று இருவரும் கைலாயம் அடைந்து இவ்வுடம்பினுடன் கைலாயபதியின் அருள் பெற்றனர். இவ்விருவர் காலம் 9-ம் நூற்றாண்டென ஆராய்ந்துள்ளனர். ஆதலின் சேரமானால் தொடங்கப் பெற்ற இவ்வாலயம் நாளடைவில் பாண்டியர்களாலும் கொங்குச் சோழர்களாலும், பல பக்தர்களாலும் புதுப்பிக்கப்பட்டும், பல மண்டபங்கள் நூதனமாக அமைக்கப்பட்டும் இக்காலத்தே தோன்றும் அளவு பெருகியுள்ளது.

### கல்வெட்டுக்கள்:

மலையில், பழனிப் பெருமான் கருவறையின் தெற்கு வடக்குச் சுவர்களிலும், வியாழ வரிசைகளிலும் மூன்று பக்கங்களில் எட்டுக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை 13-ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த கோனேரின்மை கொண்டான் வீரபாண்டிய தேவன், 15-ஆம் நூற்றாண்டின் மைசூர் வீர நஞ்சைய உடையார், விஜயநகரத்து கிருஷ்ணதேவ ராயர் ஆகியோரதும் சில சமீபகாலத்தவையுமாகும். மேற்குறித்த அரசர்கள் ஆண்டவருக்குரிய அன்றாட வழிபாட்டிற்குரிய பொருள்களுக்காக நன்செய், புன்செய், தோப்பு முதலிய நிலங்களும், திருநந்தா விளக்கு, திருவமுது, திருமஞ்சனம், பூமாலை முதலியவைகளுக்காக நிபந்தங்களும் ஏற்படுத்தியமை அக்கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

### மலைக்கோயில்:

பழனிப்பெருமானது திருமலை ஊர் நிலப்பரப்புக்கு மேல் 450 அடி உயரமுடையது. ஏறிச்செல்லும் படிகள் 697 ஆகும். மலைக் கோயிலுக்குச் செல்வோர் முதலாவதாக அடிவாரத்திலுள்ள பாத விநாயகர் கோயிலை வலம் வந்து, கிரிவீதி சுற்றியும் மலைமேற் செல்லுவார்கள். பழனிக்குன்றினைச் சுற்றி அழகியதொரு கிரிப்பிரகாரம் உண்டு, அது ஏறக்குறைய ஒன்றேகால் மைல் சுற்றளவுடையதாகும். இதன் இருமருங்கிலும் அழகியகடம்பு முதலிய பலவகை மரங்கள் செழித்தோங்கி உள்ளன. கிரியின் நாற்புற வீதியிலும் நான்கு மயில் மண்டபங்களும், தொடர்ந்த வரிசையில் பொருந்திய பல மடாலயங்கள் முதலியனவும் சிறந்து விளங்குவனவாகும். இன்னும் ஆங்கு மதுரை வீர சுவாமி, ஐம்முக விநாயகர், சந்நியாசியப்பன், அழகிய நாச்சியம்மன் முதலியோர் ஆலயங்களும், நாகமநாயக்கரது திருமூர்த்திகள், பிரமதீர்த்தம், நந்தவனங்கள், திருக்கோயில் ஏழை விடுதி, நாதசுர தவுல் பள்ளிகள், சாதுசுவாமிகளது சண்முக விலாசம் என்ற அன்னதான சமாஜ மடம், அரிசன சேவா சங்கத்தாரது நந்தனார் விடுதி முதலியன உள. கிரிவலம் வந்ததும் அடிவாரப் பக்கத்தே மீனாட்சியம்மையார்திருமணமண்டபம்


காணத்தக்கது. இங்கே பழனி வைகாவூர் நன்னாட்டை ஆண்ட பாளையக்காரர்கள், அவர்களின் பத்தினிமார்கள் ஆகியவர்களின் உருவச் சிலைகள் திகழ்கின்றன.

திருமலைக்கோயில் மேற்குத் திசையினை நோக்கியதாகும். திருவாயில் அடைந்த பின்பு கட்டைக்கோபுர வாயிலும், அதன் அணித்தான சுப்பிரமணிய விநாயகர் சந்நிதியும் இருமருங்கும் நாயக்கர் மண்டபமும் தோன்றும். இன்னும் வைசியர் மண்டபம் தாண்டி ஐந்து நிலைமாடங்கள் பொருந்திய இராசகோபுரம் கடந்து இரண்டாம் பிரகாரம் அடைவர். அங்கே 12 கற்றூண்கள் தாங்கிய பாரவேல் மண்டபம் முன்னே காட்சியளிக்கும். இது ஒரு அழகிய அணி மண்டபம். கற்றூண்கள் வேலைப்பாடுடையன. அவைகளுள் பீமசேனன் புருடா மிருகத்துடன் போராடும் காட்சியும் மற்றும் நாயக்கர், பாளையக்காரர் பலரது உருவச் சிலைகளும் குறிப்பிடத்தக்கன. இதனை ஒட்டிய வாத்திய மண்டபத்தில் தேவாலய காரியாலயம் உள்ளது. இதற்கு எதிரே தட்சிணாமூர்த்திக்கும் அதன் மருங்கே மலைக்கொழுந்து சிவன், அம்மனுக்குமாக மூன்று திருத்தளிகள் உள. திருமலையின் இப்பாகமே இம்மலையின் சிகரமென்பர்.

இதற்கடுத்த திருவாயில் துவாரபாலகர்கள் காப்புடையது. இங்கு நுழைந்ததும் மகாமண்டபம் உள்ளது. இது பக்தர்கள் பரவசத்தினால் இருமருங்கிலும் இறைவனைத் தரிசித்து ஈடுபடுதற்கமைந்தது. இம்மண்டபத்தின் 12 கற்றூண்களும் மிக வேலைப்பாடுடையனவே. உள் நுழைந்ததும், இடப்பக்கத்திலேயே கல் மேடை மீது நடராசர், சிவகாமியம்மை திருவுருவங்களுள்ளன. பின்னும் அதற்கடுத்து ஆண்டவன் பள்ளியறையும் சண்முகநாதர் திருச்சந்நிதியும் அதனையடுத்து திருவுலாப்போதரும் சின்னக்குமரர் திருச்சந்நிதியும் கண்டு வணங்கிப்பின் ஆண்டவனை அணுகும் அணிதிகழ் மண்டபத்தில் முருகப்பெருமான் சந்நிதியை அடைவர்.

## திருமுருகன் சந்நிதி:


இதுதான் ஆண்டவனது கருவறைக் கடுத்த முன்னணி மண்டபமாகிய அர்த்த மண்டபத்தின் திருவாயில். ஆண்டவன் அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி.



முருகப் பெருமான் தந்தைக்கு மந்திரம் ஓதும் திருக்காட்சி

''பிடர்பிடந்த புன்குஞ்சியும் பெருகிய
கருணைக்
கடலலம்பு கண்களுங் கவினொழுகிய முகமும்
வடிவுநூலு மார்புங்கையொண் கோலும் வயங்க
நெடியகோ வணவுடை யுடனின்றதுகண்டான்'

என்றபடி, மேற்கு நோக்கி நிற்கும் திருக்கோலம். அங்கிருந்தே அவ்வண்ணலின் இணையற்ற திருமுகமும் அருள்கனிந்த திருநோக்கமும் புன்னகை தவழும் திருவாயும், மதாணி துலங்கும் திருமார்பும், ஒல்லிய அரையின் வைத்த




## வள்ளலாரின் திருவுருவப்படம் வந்த வரலாறு

வள்ளலாரின் திருவுருவப்படத்தை புகைப்படம் எடுத்து வைத்துக்கொள்ளவேண்டுமென, அவருடைய அன்பர்கள் பலர் அவர் வாழ்ந்த காலத்தில் முயன்று அம்முயற்சியில்தோல்வியே கண்டுள்ளனர். புகைப்படம் எடுத்துக்கொள்ள வள்ளல்பெருமான் ஒருபொழுதும் இசையவில்லை. அவருடைய விருப்பத்திற்கு மாறாக மாசிலாமணி முதலியார் என்பவர் எட்டுத்தரம் புகைப்படம் பிடித்தும், புகைப்படத்தில் வெறும் வெள்ளைவேட்டி மாத்திரமே தென்பட்டுள்ளது. அவருடைய திருமுகமோ, திருக்கரமோ, திருவடிகளோ புகைப்படத்தில் சிறிதும் தென்படவே இல்லை. வள்ளல்பெருமான் மேல் பக்திபூண்ட குயவன் ஒருவன், வள்ளலாரின் திருவுருவத்தை மண்ணால் அமைத்து, உரிய வர்ணங்களையும் தீட்டி, வள்ளலாரிடம் கொண்டுவந்து காட்ட, வள்ளலார் அதையும் வாங்கி ''பொன்னான மேனி மண்ணாயிற்றே'' என்று கூறி வீசி எறிய, அம்மண்ணுருவம் சிதைந்து தூளாகியுள்ளது. அக்குயவன் மீண்டும் வள்ளலாரின் மறைவிற்குப் பின் அமைத்துத்தந்த வள்ளலாரின் திருவுருவத்திலிருந்துதான் புகைப்படம் எடுக்கப்பட்டு, இன்று நாம் கண்டு வணங்கிவரும் வள்ளலாரின் திருவுருவப்படம் விளங்கிவருகிறது.

---

இடக்கரத்தின் செவ்வியும், ஞானதண்டமேந்திய வலத்திருக்கரத்து எழிலும், திருத்தாள்களின் பொலிவும், திருத்தண்டைகளின் அழகும் காண்போரைப்பரவசம் அடையச்செய்யும். அன்பர்கள் காணப் பலப்பல்வான திருக்கோலங்கள் புனைந்து நோக்குந்தோறும் புதிய புதிய திருமுக மண்டலப் பிரகாசத்துடன் ஆண்டவர் விளங்குவார். அன்பர்க்கெளிய ஆண்டவனின், திருமேனி போகமுனிவரால் ரசக் கட்டால் செய்த நவபாஷாண மெனப்படும் ரச (லிங்க) மூர்த்தம் ஆகும். ஆண்டவன் மேற்கு நோக்கும் காரணத்தாலன்றோ மலையாள நாடு அளவற்ற செழிப்பும், எழிலும் செறிந்து இலங்குகின்றது என்பர்.

இக்கோயில் எழுந்த காலத்தே, பழனி மலை போக சித்தருக்குரிய உறைவிடமாயும், அந்தச் சித்துக்களால் மக்கள் பெரு நன்மையடைந்த இடமாயும், விளங்கியிருத்தல் வேண்டும். ஆதலால் உடலுக்குறுதிதரும் மருந்து வகைகளையும், அவற்றிற்குரிய மருத்துவ நூல்களையும் ஆக்கிக் கொடுத்த அவ்வித்தக யோக சித்தர்கள் மக்கள் உயிர்ப்பிணி அகன்று மறுமைப்பயனை அடையவேண்டுமென்று கருதினர். கருதி ஒப்பற்ற இறைவனைத் தமது உள்ளத்தின் பேராற்றல் கொண்டு (நவபாஷாணத்) திருமேனியிடத்து நிலைபெறச் செய்தருளினார் போகர். இப்பாஷாணக்கட்டினால் செய்யப்பட்ட திருமேனி மீது அபிடேகிக்கப் பெறும் பால், தேன், சந்தனம் முதலியபொருள்களை உட்கொண்டவர் தமக்குள்ள பல நோய்கள் நீங்கப்பெற்று நலமடைந்தனர். எண்ணற்ற பிறவிகளை எடுத்துழலாமல் பிறவித்தளையினையே அறுக்கும் ஆண்டவன் உடற்பிணியை அறுப்பது வியப்போ!

### சிவமறையோர் வந்த காலம்:

''போக சித்தராலே பிரதிட்டிக்கப்பெற்ற அருள்மிகு ஞான தண்டாயுதபாணி சுவாமியின் திருமேனித் தொண்டர்கள் (அருச்சகர்) முறையே அவரும், அவர் மாணவர் புலிப்பாணியும் ஆவர். அவருக்குப் பின்னர் அவர் வழித்தோன்றல்களே பரம்பரைச் சைவ மரபினராகவும் இருந்தனர். ஆனால் மதுரை நாயக்க வமிச திலகரான திருமலை நாயக்க மன்னரது (கி.பி. 1623-1629) தளவாய்,ராமப்ப அய்யன் இங்கு தரிசனத்திற்கு வந்திருக்கும் சமயம் பிராமணரல்லாத அருச்சகரிடம் தீர்த்தப் பிரசாதம் வாங்க மனமில்லாது, அப்போது உள்ள பூசகர்களை நீக்கி, ஆதிசைவ மறையோர்களைத் தருவித்து அவர்களையே பூசகர்களாகவும்,முன்னவர்களைத் திருவணுக்கத் தொண்டர்களாகவும் நியமித்தார் என்ற விவரம் ஒரு செப்புப் பட்டயத்தில் காணக் கிடக்கின்றது. அப்புலிப்பாணி மரபினோரே இப்போதும் போகர் சந்நிதியைப் போற்றிப் பூசித்து வருகின்றனர்.


## கழுமரமே புகழ்மொழிகள்

என்னைக் கண்டித்துத் திருத்துகிறவர்கள்,
என்னுடைய
பாதுகாவலர்களாக இருக்கட்டும்
என்னை இகழ்கிறவர்கள், என்னுடைய.
சுற்றத்தார்களாக இருக்கட்டும்
என்னை மரியாதை இன்றிநடத்துகின்றவர்கள்
என்னுடைய தலைவர்களாக இருக்கட்டும்
என்னைக் கேலிசெய்கிறவர்களும், எதிராக நின்று
ஏளனம் செய்கிறவர்களும், என்னுடைய
உடன் பிறந்தார்களாக இருக்கட்டும்.

ஆனால்

என்னைப் பொய்யான புகழுரைகளால் போற்றி
முகஸ்துதி செய்கின்றவர்கள், என்னைத்
தங்கத்தால் செய்த கழுமரத்தில்
கொண்டு ஏற்றுபவர்களாக இருக்கட்டும்
பெருந்தகாய்! கூடல சங்கம தேவா!

—மகான் பசவர்



## மலைச்சுற்றுக் கோயில்கள்:

போகர் சந்நிதி மலைமீது உட்பிரகாரத் தென்மேற்கு மூலையிலுள்ளது. அவர் பூசித்த புவனேசுவரி அம்மையின் திருமேனி இன்றும் பூசையிலுள்ளது. இவ்விடத்தேதான் போகர் சமாதியிலிருந்தாரெனக் கூறுவர். இதனின்றும் தண்டாயுதபாணிப் பெருமான் திருவடி நிலைக்கு ஒரு சுரங்கவழி இருக்கின்றதென்றும், கடைசி முறையாக இதனுட் சென்ற போக சித்தர் திரும்பிவராது அங்குள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. இன்றும் இக்கோயிலின் தென்பாகத்தில் கன்னிமார் என்னும் சப்த கன்னிகைகளின் சந்நிதியும் கோபுரவாயிலை யடுத்து வடபுறம் ஈசுவரன், அம்மன் கோயிலும் கோயில் உட்பிரகாரத்து ஈசானிய மூலையில் நவவீரர்களுக்குச் சந்நிதியும் உள்ளன. இப் பிரகாரத்தின் தென்பாகத்தில் கைலாசநாத ருக்கு ஒரு திருத்தளியும், அதற்கடுத்து சண் டேசுவரர் திருச்சந்நிதியும் உள்ளன.

## திருவாவினன்குடிக் கோயில்:

''காவினன் குடிலிறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவோம்''
—கச்சிப்பர்.

திருவாவினன்குடிக்கோயிலே இப்புராதன தல ஆதிக்கோயிலாகும். இதனையே நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகனின் மூன்றாம் படைவீடாகப் போற்றியுள்ளார். இத்தலத் திலே முருகப்பெருமான் மயில்மீது அமர்ந்து குழந்தை வேலாயுதசுவாமி என்ற பெயருடன் விளங்குகின்றார். காலவரையறைக் கெட்டாத இக்கோயில் சுமார் 50 ஆண்டுகட்கு முன்னர் காரைக்குடி திருநா. மு. சுப. இலட்சுமணன் செட்டியார் குடும்பத்தாரால் சிற்ப முறை யிலே புதுப்பிக்கப்பெற்று 1910-ம் ஆண்டு ஜுன் மாதம் 25-ம் நாள் மேற்படி குடும்பம் காரைக்குடி திரு நா. மு. சுப. ராம. சுப்பிர மணிய செட்டியார் அவர்களால் கும்பாபி டேகமும் நடந்தேறியுள்ளது. இத்திருப்பணி பாராட்டத்தக்கதே. தற்சமயம் பழமையான இக்கோயிலின் கோபுரமும் முன் மண்டபமும் புதுப்பிக்கப்பட்டு, அதனைச் சமீபத்தில் திரு ஆவினன்குடி திருப்பணிக்கர்த்தாக்கள் திரு நா. மு. வெ. அவர்களாலும், திரு நா. மு. சுப. ராம. சுப. இராமநாதன் செட்டியார் அவர் களாலும், மற்றும் அக்குடும்பத்தாரர்களாலும் தொடங்கப் பெற்று நடைபெற்று முடிவுற்றன. இவ்வாலயத்தில் பல புராதனக் கல்வெட் டுக்கள் இருந்திருத்தல் வேண்டும். அவைகளின் அருமை தெரியாது திருப்பணிக் காலத்தில் யாவும் கல்லுளியால் செதுக்கப்பட்டும், வெவ் வேறாகப் பிரிக்கப்பட்டுமிருத்தல் வருந்துதற் குரியதாகும்.

தமிழ் மக்கள் தாம் செய்துள்ள நல்ல றங்கள் என்றும் சிதையாது நடைபெறவேண்டு மென்ற நல்லெண்ணத்துடன் அவை இன் னின்னவென்றும் அவை நடைபெறுவதற்குப் போதிய வருவாய் இவையென்றும், கோயில் திருமதில்களில் எழுத்து வடிவிலே பொறித்து வைத்த வழக்கம் தஞ்சை சோழ வம்ச திலக ரான முதலாவது இராசராசசோழனதாகும். இது, இவன் வழிவந்தோராலும் மற்றையோ

ராலும் கையாளப்பட்டு வந்தமை நம்நாட்டின் தவப்பயனே. ஆகவே ஆலயங்களைப் புதுப் பிக்கும் செல்வர்கள் ஆங்காங்குக் காணப்படும் கல்வெட்டுக்களை முறைப்படியே எண்ணிக்கை யிட்டுத் தனியே எடுத்து வைத்து, பின்னர் திருப்பணியில் அவைகளை வரிசைப்பட ஒழுங் காக வைத்துக்கட்டுவதே சாலச்சிறப்புடைய தாகும். மற்றொரு முறையுமுண்டு. அது அக் கல்வெட்டுக்களிலுள்ள வாசகங்களை எழுதி வைத்து, கற்சுவர் எழுப்பிய பின்பு அவைகளை மறுமுறையும் அங்குப் பொறித்து வைத்த லாகும். இல்லையேல் சிறிதளவேயாயினும் நிலைத்துள்ள நமது புராதன சரித்திரக் குறிப்புகள் அழிந்தொழியநேரும். திருப்பணி யாளர்களும் தாம் பழங்கோயில்களைப் புதுப்பிக்கும் முறையில் நன்மை செய்வதே போல் நம் நாட்டிற்கே பெருந்தீங்கிழைத்தவர் களாகவும் ஆவர். இதனைத் திருப்பணிச் செல்வர்கள் கவனிப்பார்களாக!

பழநித் திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப்பெற்று 5-7-1968ந் தேதியில் திருக்குட நன்நீராட்டு விழா நடைபெற்றது.

பழநித் திருக்கோயிலில் பங்குனி உத்திரப்பெரு விழா மிகச்சிறப்புடன் 10 நாட்கள் நடைபெறும். அதன் 6ம் நாள் விழா வில் வெள்ளித்தேர் மீது முத்துக் குமரன் பவனி வருதலைக்காண்போர் கண்பெற்ற பயனை எய்தினவராவர். ஆவினன்குடிப்பெருமானுக்கு நாள்தோறும் ஆறுகாலம் பூசனையும், மாதக் கார்த்திகைத் திருவுலாவுடன் மற்ற சிறப்பு களும் நடைபெறுகின்றன. இத்தல விருட்சம் நெல்லியாகும்.

பழநித் தலத்தரிசன முறையைக் கூறுவ தான செய்யுளொன்று பாராட்டுதற்குரியது. அது பின்வருமாறு:

''தருமிரவி யுதயமது கண்டுவை காபுரி
தனைக்கண்டு சுத்தி கண்டு
சண்முகப்புனல்கண்டு நியமாதி கண்டுபின்
சரவணப்பொய்கை யாடி
அருள்பெருகு மாவினன் குடிகண்டு கைலாசர்
அம்மைபெரி யம்மையைக் கண்(டு)
அம்பொன்மலை கண்டதி விடும்பர்சந்
நிதிகண்டங்(கு)
அநேக கண் காட்சி கண்டு
கருணைகண் டருள்வள்ளி தெய்வானை
யைக் கண்டு
களிகண் டிருக்கு முன்றன்
கமலபா தங்கண்ட பேறொருக் காலுமக்
காலனைக் கண்டிடு வரோ?
பரிதிவலி கண்டவன் றனைவென்ற தம்பிதன்
பராக்ரமங் கண்டது ரையே
பழமறைசொ லியசீல தொழுமவர்க ளநுகூல
பழனிமலை வடிவேலனே''

—வடிவேலர் சந்நிதி முறை

## வாசகர் எண்ணங்கள்...

அன்புள்ள டாக்டர் த.அமிர்தலிங்கம்,

வாழ்த்துக்கள். திருக்கோயில் இதழ் அரிய கருத்துக்களையும், சிறந்த கட்டுரைகளையும் தாங் கிச் சிறப்பாக வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. உங் கள் பணிகள் மென்மேலும், சிறப்பும் உயர்வும் பெற விழைகிறேன்.

—டாக்டர் பொற்கோ, சென்னைப்பல்கலைக் கழகம்.

* * *

மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர் களின்'சமயமும் சமாதானமும்'பற்றிய ஆங்கிலமும் தமிழும் கலந்த அற்புதமான சொற்பொழிவைத் திருக்கோயிலில் படித்து மகிழ்ந்தேன். அவருடைய ஆங்கிலச் சொற்பொழிவை காந்திகிராமப் பல் கலைக் கழகத்தில் கேட்டு இன்புறும் அந்த இனிய வாய்ப்பும் கிடைக்கப்பெற்றவர்களில் நானும் ஒரு வன். அவருடைய சிறந்த சொற்பொழிவு அனை வருக்கும் பயன்படுமாறு திருக்கோயிலில் வெளி யிட்டமைக்கு என் மனம் நிறைந்த பாராட்டு தல்கள்.

—சுவாமிநாதன்,
காந்தி கிராமப்பல்கலைக்கழகம்.

* * *

''கந்தர் சஷ்டிக்கவசம்'' மிகச்சிறந்த முறை யில் பதிப்பிக்கப்பட்டிருந்தது. பத்திரப்படுத்திக் கொண்டேன்.

—ஜீயர் பிரசாத், சென்னை.

சிறப்புத் திருமணங்களைப் பற்றிய மாண்பு மிகு அமைச்சரின் பெயர் விளக்கம் மிகச்சிறப்பாக இருந்தது. அறம் வளர்க்கும் அறநிலையத்துறை அமைச்சரின் பொற்பணிகள் தொடரட்டும்; தழைக்கட்டும்! புவி முழுதும் போற்றப்படட்டும்.

—அ.செவ்வேள், சென்னை.

* * *

வெள்ளீசுவரர் தலவரலாற்றிலும், திரு வானைக்கா தல வரலாற்றிலும், இடம் பெற்றி ருந்த படங்களைப்பார்த்து என் குழந்தைகள் அவற்றை எளிதில் புரிந்துகொண்டதோடு, அவர் களே படங்களைப்பார்த்து வரலாற்றை மற்ற குழந்தைகளுக்குச் சொல்லத்தொடங்கிவிட்டார்கள்

—நாகலிங்கம், இராசிபுரம்.

* * *

டாக்டர் இரா.நாகசாமி அவர்களின் இராஜ ராஜேஸ்வர விஜயம் ஒப்பற்ற இலக்கியப்படைப்பு, கவிதைகள் படைக்க வல்ல கவிஞர்களுக்கும் நாட் டிய நாடகம் படைப்பது என்பது கடினமானது. தொல்பொருள் துறை இயக்குநர் கவிதையில் நாட்டிய நாடகத்தை படைத்ததன் மூலம் தம்மை ஓர் ஒப்பற்ற கவிஞராகக் காட்டிவிட்டார்.

—இரா.நல்லக்கண்ணு,களக்காடு.

# உறையூர் நாச்சியார் கோவில்


**வி. மணி, எம்.ஏ.,**
**புனித வளனார் கல்லூரி, திருச்சி-620 002**

ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெரும் சோதியாகிய எம்பெருமான், தன் எளிவந்த கருணையினால் பற்பல ஆலயங்களில் எழுந்தருளி அடியவர்களுக்கு அருள்பாலிக்கிறான். சூரிய ஒளி அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருந்தாலும் ஒரு லென்ஸ் (Lens) மூலமாகவே சூரியகிரண சக்தி ஆற்றலுடன் வெளிப்படுவது போல, எம்பெருமான் பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளில் இருந்தாலும் எம்பெருமானின் கருணை வெளிப்படுவது அவன் உவந்து எழுந்தருளியிருக்கும் 108 திவ்ய சேத்திரங்களில் (திருப்பதிகளில்) தான் என்பது வைஷ்ணவ சமயத்தின் நம்பிக்கை. (இந்த 108 திவ்ய சேத்திரங்களையே ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள்) மேற்கூறிய ஐம்பெரு நிலைகளில் முதலாவதாகிய பரமாவது பரமபதமாகிய திருநாட்டில் ஸ்ரீ பூமி, நீளா தேவிகளுடன், நித்ய சூரிகளுடன் காட்சியளிக்கும் நிலை (இதுதான் 108வது திருப்பதி), வியூஹம் என்பது திருப்பாற் கடலில் அரவின் அணையானாய் பையத்துயிலும் நிலை (இது 107வது திருப்பதி). விபவம் என்பது நல்லோரக்காக்கவும், தீமையை ஒடுக்கவும் இராமனாய், கிருஷ்ணனாய் அவதாரம் எடுத்து அடியார்களுக்கு அருள்வது. அந்தர்யாமித்வ நிலையானது உலகம் முழுவதும் விறகில் தீ போலவும் பாலில் நெய் போலவும் மறைய நிற்கும் நிலை. ஐந்தாம் நிலையான அர்ச்சை என்பது பற்பல கோவில்களில் விக்கிரகங்களில் எழுந்தருளும் நிலை. எம்பெருமான் அவ்வாறு எழுந்தருளும் பல திருப்பதிகளில் சோழநாட்டில் உள்ள 40ல் இரண்டாவதான திருப்பதி தான் உறையூர்.

திருஉறையூர் என்பது குறுகிஉறையூர் என ஆயிற்றுஎன்பர். திரு வாகிய மஹாலட்சுமி உவந்து உறைகின்ற ஊர். ஆதலால் திருஉறையூர் என்ற பெயர் ஏற்பட்டது. திவ்வியப்பிரபந்தத்தில் இந்த திவ்ய சேத்திரம் ''கோழி'' என்று அழைக்கப்படுகின்றது.

இத்தலம் தமிழ்நாட்டின் நடுநாயகமாக விளங்கும் திருச்சிராப்பள்ளி நகரின் ஒரு பகுதியாகும். திருச்சி ஒரு பெரிய நகரம் ஆனதால் ரயில், பஸ், ஆகாயவிமானம் மூலம் மற்ற பெரிய நகரங்களுடன் தொடர்பு கொண்டு உள்ளது. தங்கும் வசதிகள் நிறைய உண்டு. உறையூர் கோயிலுக்குச் செல்ல நகரின் பல பகுதிகளிலிருந்து டவுன் பஸ் வசதிகள் நிறைய உண்டு. மற்றும் கோயில் வாசல் வரை நல்ல தார் ரோடு உள்ளதால், எல்லா வாகனங்களும் செல்வது எளிது.

கோவிலுக்கு இன்று வழங்கும் பெயர் உறையூர் நாச்சியார் கோயில் ஆகும். ''கோழி'' என்பதெல்லாம் திவ்வியப்பிரபந்தத்தோடு சரி. இன்று யாருக்கும் அந்தப்பெயர் தெரியாது. நாச்சியார் கோயில் என்றே மற்றொரு சோழ நாட்டுத்தலமும் உள்ளது. 20ம் தலமான திருநறையூருக்கும் நாச்சியார் கோயில் என்று பெயர் உண்டு.






கோயில் பிரதான சாலையிலிருந்து ஒதுங்கி சிறிது உள்ளடக்கமாக உள்ளது. சிறிய அழகிய பெட்டகம் போன்ற கோயில். வடக்கு நோக்கி ஒரே வாயிலை உடையது. இராஜ கோபுரம் உண்டு. இதுபோல வடக்கு நோக்கிய இராஜ கோபுர அமைப்பு காண்பதற்கு அரியது. இராஜ கோபுரம் சிறியதானாலும் கம்பீரமாகஉள்ளது. அழகிய 5 நிலைகளைக்கொண்டு விளங்குகிறது. உள்ளே நுழைந்தவுடன் ஒரு விசாலமான பிரகாரம் உள்ளது. கல் தள வரிசை பரவப்பெற்ற மிகச்சுத்தமாக வைக்கப்பட்டுள்ள இந்த திருச்சுற்றில் சேனை முதலியாருக்கும், நம்மாழ்வாருக்கும், உடையவர் ஸ்ரீராமானுஜருக்கும் திருப்பாணாழ்வாருக்கும் தனி தனிச் சந்நிதிகள் உண்டு. ஒவ்வொரு சந்நிதியைச் சுற்றிலும் சிறு பிராகாரம் உண்டு.

இவை தவிர பிரதானப் பிராகாரத்தில் ஓர் அழகிய ஆழமான குளம் உண்டு. இங்குத் தாயாருக்குத் தெப்ப உற்சவம் நடைபெறும். மேலும் இப்பிராகாரத்திலேயே வெள்ளிக் கிழமை மண்டபம், வசந்தமண்டபம், ஊஞ்சல் மண்டபம் ஆகியவை நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன.

இவைகளைச் சுற்றிக்கொண்டு கோயிலுக்குள்ளே எம்பெருமான் அழகிய மணவாளனைச் சந்திக்கச் செல்லவேண்டும். வெளிப்பிரகாரத்திலிருந்து சந்நிதிக்கு செல்ல கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் இரு வாயில்கள் உள்ளன. இவற்றில் கிழக்கு நோக்கிய வாயிலே முக்கியமானது. மிகப்பெரிய அழகுற அமைக்கப்பெற்ற துவாரபாலகர்கள், கம்பீரமான கல் யானைகள் நம்மை வரவேற்க உள்ளே நுழைகிறோம். பரந்த முன் மண்டபம் வேலைப்பாடுகள் நிறைந்த கல் தூண்கள் சோழர் காலக்கட்டிடக் கலைக்குச் சான்று பகர்வது போல் காட்சியளிக்கின்றன. இந்த மண்டபத்தில் தான் கருடனுக்கு ஒரு சிறு கோயில் உள்ளது. மூர்த்தி சிறியது தான்.

இந்த மஹா மண்டபத்திலிருந்தே எம்பெருமான் அழகிய மணவாளனைத் தரிசிக்கலாம். தெற்கு வாயிற்படியைக் கடந்து உள்ளே அர்த்த மண்டபத்தை அடைந்து எம்பெருமான் முன் நிற்கிறோம்.

எம்பெருமான் கரிய பெரிய திருமேனி சுமார் 8 அடி உயரம் இருக்கும். தண்புனல் சூழ் திருவரங்கத்தான், பாம்பணையான் இங்கு நின்ற திருக்கோலத்தில் நம்மை அருள்பாலிக்க எழுந்தருளியிருக்கிறான். சங்கு ஒரு கையில் ஏந்தி (பிரயோக) சக்கரம் மற்றொரு கையில் தாங்கி இவ்விரு கைகளும் மேல் நோக்கி உள்ளன. கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் உள்ள இடக்கையில் கதை தாங்கி, வலது திருக்கரத்தினால் ''யோக சேமம் வஹாம்யஹம்'' என்று நமக்கு அபயம் அளிக்கிறார். வடக்கு நோக்கிய திருமேனி.



பெருமானுக்கு வலப்புறம் தாயார் கமலவல்லி நாச்சியார் அமர்ந்த நிலையில் காட்சி அளிக்கிறார். சுமார் 5 அடி உயரம் உள்ள திருமேனி. வலக்கையில் தாமரைப்பூ தாங்கி இடக்கையை வரத ஹஸ்தமாக வைத்துக்கொண்டு மலர்ந்த முகத்துடன் நம்மை அருள் ஒழுகப் பார்த்த வண்ணம் அமர்ந்துள்ளார். மூலவர் அழகிய மணவாளரும், தாயார் கமலவல்லி நாச்சியாரும் வடக்கு நோக்கிஉள்ளனர். வடக்கே காவிரிக்கு இடக்கரையில் ''குடதிசை முடியைவைத்து குண திசை பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டி, தென்திசை, இலங்கை நோக்கி'' அரவணையில் துயிலும் திருவரங்கனைப் பார்த்தவண்ணம் உள்ளனரோ என வியக்கும் வண்ணம் உள்ளனர்.

இத்தலத்தில் தான், தென் அரங்கன் சோழ அரசனான நந்தசோழன் மகளான கமலவல்லி அம்மையை மணந்து அருள்புரிந்தான் என்பது செவி வழிச்செய்தி. ஆகவே எம்பெருமான் நின்ற நிலையிலும், தாயார் இருந்த நிலையிலும் ''கல்யாண அவசரத்தில்'' காட்சி அளிக்கின்றனர். இரண்டுமே அழகிய சிற்ப வடிவங்கள்.

இதுவே இத்தலத்தின் தனிச்சிறப்பு. தாயார் சந்நிதி என்று தனியாக ஒன்று இல்லாமல் தாயார் கமலவல்லி நாச்சியாரும் பெருமான் அழகிய மணவாளனுக்கு அருகிலேயே அதே சந்நிதியில் காட்சியளிப்பது சிறப்பு தானே.

மூல மூர்த்திகளுக்கு முன்னே உள்ள உற்சவ விக்கிரகத்தில் ஒரு சிறப்பு உண்டு. இங்கு தாயாருக்கு மட்டுமே உற்சவ விக்கிரகம் உள்ளது. பொதுவாக மூலவருக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள உற்சவ மூர்த்தி அதேதெய்வத்தினுடைய தாக இருக்கும். ஆனால் இங்கு மூலவர் அழகிய மணவாளனுக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள உற்சவமூர்த்திதாயாருடையது. அமர்ந்த நிலையில் நல்ல அழகிய வேலைபாடமைந்த உலோக விக்கிரகம் மனதைக்கவரக் கூடிய வடிவச்சிறப்பு மிக்கது. கருவறைக்கு மேலே கல்யாண விமானம்.

இக்கோயில் திருஅரங்கம் கோயிலின் மேற்பார்வைக்குட்பட்டது. அரங்கன் கோயில் அர்ச்சகர்களே இங்கும் மூலவருக்கு அர்ச்சனை புரிகிறார்கள். இக்கோயில் உற்சவங்களுக்கு வேண்டிய திரு ஆபரணங்கள் திருவரங்கம் கோயிலிலிருந்து சொண்டுவரப்பட்டு உற்சவம் முடிந்ததும் திரும்ப எடுத்துச் செல்லப்படுகின்றன. கோயில் பூஜை முறைகள் பாஞ்சராத்ர ஆகம முறைப்படி நடைபெறுகின்றன. தென்கலை வழி நடைமுறை விதிகள் உள்ளன.

திருஅரங்கன் பங்குனி உத்திரத்தின்போது 6ம் நாள் இங்கு எழுந்தருளி உறையூர் தாயாருடன் ஒரே மேடையில் இருந்து காட்சியளிக்கிறார். இது தவிர இங்கு தாயாருக்குத் தை மாதத்தில் திருவாய் மொழித்திருநாளும் வைகாசி அல்லது ஆனி மாதங்களில் 7 நாள் வசந்த உற்சவமும், கார்த்திகை மாதம் 7 நாள் ஊஞ்சல் உற்சவமும் மாசி மாதம் தெப்பத்திருநாளும் சிறப்பாகக்கொண்டாடப்படுகின்றன. இவை தவிர ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இங்கு தாயார் கமலவல்லி நாச்சியாருக்கு நடைபெறும் திருவிழா சிறப்புடையது.

## முத்திக்கு முயல்க

நீரினின்று நிலத்தில் எடுத்துப் போடப் பட்ட மீன் ஆனது தரை தன்னுடைய சொந்த இடமன்று என்று துள்ளிக் குதிக்கிறது. சதுப்பு நிலத்தை எட்டிவிட்டால் அது சிறிது ஆறுதல் பெறுகிறது. அங்குக் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு அம்மீன் மேலும் முயல்கிறது. அது சேற்றுக்குள் வந்து வீழ்ந்தால் இன்னும் கொஞ்சம் நிம்மதி பெறுகிறது. அடுத்த எத் தனத்தில் அது ஆழமற்ற நீர்நிலையை எட்டு கிறது. அதன் விளைவாக இன்னும் கொஞ் சம் உயிர் அதற்கு வருகிறது. சிற்றோடை ஒன்றை எட்டியதும் தனக்கு உய்வு கிட்டிவிட் டதாக அது உணர்கிறது. பெரிய ஆற்றில் புகுந்ததும் அதற்கு பயமில்லை. பிறகு ஆழ் கடலைச் சென்று சேர்ந்துவிட்டால் அம்மீன் தனக்கேற்ற வீடுபேறு பெற்றதாகிறது. கடவு ளிடத்திருந்து பிரிந்து பிரபஞ்ச வாழ்வுக்கு வந்துள்ள மனிதன் அந்த மீனின் நிலையில் இருக்கிறான். தெய்வீகத்தைப் பெறுதற்கு ஏற்ப அவன் அல்லலினின்று விடுபடுகிறான். ''மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்'' என்பது அவன் அடைகிற முடிந்தநிலை.

—சுவாமி சித்பவானந்தா

மேற்படி உற்சவங்களைத்தவிர, ''அமலன் ஆதிபிரான்'' பாடி அருளிய பெருமானின் ஸ்ரீவத்ஸ அம்சமான, திருப்பாணாழ்வார் பிறந்த பதியாதலால் இங்கு அவருக்கும் 10 நாள் சிறப்பாக உற்சவம் உண்டு. அது அவர் அவதரித்த கார்த்திகை ரோகிணிக்கு முன்ன தாக 10 நாட்கள் நடைபெறுகின்றன.

இத்தலத்தைத் திரு மங்கை ஆழ்வார் ஒரு வர் மட்டுமே மங்களாசாசனம்செய்திருக்கிறார் (திவ்வியப்பிரபந்தத்தில்). இரண்டாம் ஆயிரத்தில் (பெரிய திருமொழி) 9ம் பத்தில் 2ம் திருமொழியில், 5ம் பாடலில் இத்தலத்தைக் குறிக்கிறார்.

''கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவலரே ஒப்பர், குன்றம் அன்ன
பாழியந் தோளும் ஓர் நான்கு உடையர்
பண்டு இவர் தம்மையும் கண்டுஅறியோம்
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில்
மாகடல் போன்று உளர், கையில் வெய்ய
ஆழி ஒன்று ஏந்தி ஓர் சங்கு பற்றி
அச்சோ ஒரு அழகியவா''

இப்பாடல் திருநாகை (நாகைப்பட்டினம்) திவ்ய சேத்திரத்துக்குரியது.

இம்மாதிரித் தனக்கென தனிப்பதிகம் இல் லாமல், மற்றைய தலப்பதிகத்தில் வைத்துப் பாடப்படும் தலங்கள் தேவாரத்தில் வைப்புத் தலம் எனப்படும். ஆனால் திவ்யப்பிரபந்தத் தில் வைப்புத்தலம் என்று தனியே இல்லை. பதிகம் பெற்ற பதி, இடையில் வைக்கப்பெற்ற திருப்பதி எல்லாம் சேர்த்தே திவ்யபிரபந்தத் தலங்கள் 108 தான். மேற்குறிப்பிட்ட பாடல் 19ம் தலமான திருநாகைக்குரிய பாடலாகும்.

திருநாகைப்பகுதியிலுள்ள சௌந்தர ராஜப் பெருமானின் வடிவ அழகில் ஈர்க்கப் பட்டு பதிகம் பாடத் தொடங்கிய திருமங்கை மன்னன் சௌந்தரராஜப் பெருமாளின் அழகுக்கு ஒப்பான அழகுடையவர் உறையூர் பெருமானும், கூடலழகரும் தான் எனத் துணிந்து ''கோழி'' கோயில் கொண்ட கோவ லரே ஒப்பர்'' எனப்புகழ்ந்து பாடுகிறார். இப் பாசுரத்தில் (11-9-2-25) கோழி என்று குறிப் பிடுவது உறையூரை ஆகும். பெயர் வந்த காரணம் சரித்திரச் சிறப்புடையது. சோழப் பேரரசரான கரிகாற் பெருவளத்தான், காவிரிக் குக் கரை கட்டுவித்து, அவ்வழியே வெற்றி உலா வரும்போது இந்தப்பகுதியில் ஒரு கோழி தன் மூக்கினால் சோழப் பேரரசனின் பட்டத்து யானையைக் கொத்தி, அதைத்தடுத்து நிறுத்தி யது. அது கண்ட மன்னன் வியந்து, இம் மண்ணே வீரம் பொருந்தியதாக இருக்கும் என்று எண்ணி இங்கேயே தன் சோழப்பேர ரசின் தலைநகரை நிறுவினான். ஆகவே கோழி காரணமாக அமைந்த நகரானதால் இதற்குக் கோழி என்று பெயராயிற்று.

இத்தனை சிறப்புப் பொருந்திய திவ்ய சேத்திரத்திற்கு அருகிலேயே ''முக்கீச்சரம்'' என்ற சம்பந்தர் பாடல் பெற்ற சிறப்பு மிக்க சிவன் கோயில் உள்ளது. கோயிலுக்கு மேற்கே சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடல் பெற்ற கற்குடி என்ற உய்யக் கொண்டான் திரு மலையும்,அருணகிரிநாதர் வாழ்வோடு தொடர் புள்ள புகழ் பெற்ற முருகன் கோயிலான வய லூரும் உள்ளன. திருச்சி நகரிலேயே தேவார திருவாசகச் சிறப்பு மிக்க தாயுமானவர் மலைக் கோயிலும், காவிரிக்கு அக்கரையில் வைணவ மரபில் கோயில் எனப் புகழ்பெற்ற திருஅரங்கம் கோயிலும், நால்வரால் பாடல்பெற்ற திரு ஆனைக்கா சிவத்தலமும் உள்ளன. திருச்சி மாநகரில் வசதியாக தங்கிக்கொண்டே இத் தனைத்தலங்களையும் தரிசித்து ஆண்டவன் அருள் பெறலாம். வருகிறீர்களா?

# மயிலை கபாலீசுவரர் கோயில்



சிங்காரச் சென்னையில், சிறந்தோங்கும் திருமயிலையில் விளங்குவது அருள்மிகு கபாலீசுவரர் கோயில்.

ஆலயத்தின் கம்பீரமான கோபுர வாயிலினுள் நுழைகிறோம். ஆடவரும், மகளிரும், குழந்தைகளும் வந்த வண்ணம் இருக்கின்றனர். தெய்வ மணங்கமழும் இத்திருக்கோயில் துப்புரவாய்க் காட்சியளிக்கிறது. அமைதியான சூழ்நிலையும், நல்ல காற்றோட்டமும் உள்ள இக்கோயிலில் வழிபட வருவோருக்கு வசதிகள் பலவும் செய்திருப்பதைப் பார்த்து மகிழ்கிறோம். மயிலைக் கபாலீசுவரர் கோயில், வரலாற்று சிறப்புமிக்கது. அந்த வரலாற்றைத் தெரிந்து கொள்வோமா?

மயிலாப்பூர் -அன்றும் இன்றும்அழகு கொழிக்கும் பழம் பெரும் நகராகத் திகழ்கிறது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பேசெல்வம் கொழித்த திருநகராய்த் திகழ்ந்திருந்தது. கி.பி.1662 -ல் ஜான் நையுப் (John Neiuhab) ''மயிலையை அடுத்த சாந்தோம் கிழக்குப்பகுதியில் உள்ள செல்வம் மல்கிய துறைமுகங்களில் ஒன்று'' என்று கூறியுள்ளார்.

கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் மயிலாப்பூருக்கு வருகை புரிந்த ஜான் டி மரிக் நோலி (John De Marig Noli) என்பார் மயிலாப்பூரின் மயில்களைப் பற்றியும், மயிலாப்பூருக்குச் சீனத்துக் கப்பல்கள் வந்து போன செய்தியினையும் சுவைபடத்தெரிவித்துள்ளார்.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் வெனிஸ் நாட்டிலிருந்து வந்த மார்க்கபோலோ (Marcopolo) என்ற புகழ் வாய்ந்த பயணி, மயிலாப்பூர் மயில்களுக்குப் பெயர் போனதென்று குறித்துள்ளார்,

எனவே, மயிலாப்பூர் பண்டை நாட்களில் பன்னாட்டினரும் வந்து குழுமும் ஓர் புகழ் பெற்ற பெரிய துறைமுகமாக விளங்கியது.

பல்லவர் காலத்தில் மாமல்லபுரம் முக்கியத் துறைமுகமாக அமைவதற்கு முன் மயிலாப்பூரே பல்லவர்களின் முக்கியத் துறைமுகமாக விளங்கி இருக்கிறது. காஞ்சியினைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவப் பேரரசர்கள் தங்களை ''மயிலைக்காவலன்'' என்று அழைத்துக் கொண்டு பெருமிதங்கொண்டனர்.

2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த டாலமி (Ptolemy) என்பார் மயிலையை ''மயிலார்பன்'' (Mylarphan) என்றார். 9ஆம் நூற்றாண்டின்கல்வெட்டுகளில் இவ்வூர்'மயிலார்ப்பு' என்றும் ''மயிலாப்பில்'' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ''மயிலாப்பில்'' என்றால் மயில் அகவும் இடம் எனப்பொருள்.

5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருமழிசை ஆழ்வார் மயிலாப்பூரை ''மாமயிலை'' எனவும், 7 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஞானசம்பந்தர் ''மயிலை'' எனவும், ''மயிலாப்பு'' எனவும் குறிப்பிடுகிறார். நாவுக்கரசரோ இதனை ''மயிலாப்பில்'' என அழைக்கின்றார். நந்திக்கலம்பகமும் கலிங்கத்துப் பரணியும் இவ்வூரினை ''மயிலை'' என்றே அழைத்து மகிழ்ந்தன. சுந்தரரும் திருமயிலை ஆழ்வாரும் 'அருணகிரிநாதரும் இவ்வூரை''மயிலை''என்றேஅழைக்கின்றனர். பெரிய புராணம் கண்ட சேக்கிழார் பெருமானோ ''திருமயிலாபுரி'' என இவ்வூருக்குப் பெயர் சூட்டினார்.

மயில் உருவமான உமையம்மை சிவபெருமானை இங்கே வழிபட்டு மயிலுரு நீங்கப்பெற்றதால், இவ்வூருக்கு மயிலாப்பூர் எனப்பெயர் வழங்கலாயிற்று என்பது, புராணம் கூறும் கதையாகும்.

இலக்கியமும் வரலாறும் இவ்வூரில் அழகிய மயில்கள் அகவிய காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டிப் புராணக் கூற்றுக்கு வலிவு தேடுகின்றன.

சேக்கிழார் என்ற வேளாண் குடிக்குப்புகழ் தேடித்தந்தவர்க்குச் ''சேக்கிழார்'' என்று பெயர் வழங்கியது போல, தொல்காப்பியக் குடியில் பிறந்து அக்குடிக்குப் பேரும் புகழும் பெருமையும் சேர்த்தவருக்குத் ''தொல்காப்பியர்'' என்ற பெயரே நிலைத்தது போல, ''வாயிலார்'' என்ற வேளாண் குடியில் பிறந்து அக்குடிக்கு அளப்பரும் பெருமையை தேடித் தந்த வாயிலார் நாயனார் பிறந்தது இம் மயிலையிலேயே!

வள்ளுவனை உலகினுக்கும் வான்புகழைத் தமிழ் நாட்டுக்கும் தந்தது திருமயிலைதான். அருள் சுரக்கும் ஆழ்வார்கள் பன்னிருவரில் மூன்றாமவராகிய பேயாழ்வாரைப் பெற்றெடுத்து, பாமணக்கும் பாசுரங்களை அருவியாய், ஆறாய், பெருவெள்ளமாய் ஓடச்செய்த பெருமையைப் பெற்றதும் இத்திருமயிலைதான்.

இன்று தனிப்பேரூராய்த் திகழும் திருவல்லிக்கேணி அன்று மாடங்கள் மலிந்த மயிலைப் பேரூரின் ஒரு பகுதியாக இருந்ததென்பது ''தேனமர்சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி'' என்று பாடிய திருமங்கையாழ்வார் பாசுரத்தில் இருந்து தெரிய வருகிறது. இதனால் அன்றைய மயிலை இன்றைய திருவல்லிக் கேணிப் பகுதியையும் உள்ளடக்கிய பெரும் பேரூராய்த் திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

திருக்கோயில் மேற்கு நோக்கி இருக்கிறது. வாயிலின் முன்புறம் நடுமண்டபத்தோடு கூடிய பெரிய திருக்குளம் பேரழகுடையதாய்க் காணப்படுகிறது. இதுவே ''கபாலி தீர்த்தம்'' எனப்படும்.

திருவருள்மிகு சிவலிங்கத் திருமேனியோடு மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறான் கபாலீச்சுவரன். பெருமானுக்கு வலப்புறம் தெற்கு நோக்கிய தனிக்கோயிலில் ஆட்சி புரிகிறாள் கற்பகத்தாய். பெருமானுக்கு இடப்புறம் உள்ள கோயிலில் மேற்குத் திசையில் மேவி ஆறுமுகத்தோடு அமர்ந்திருக்கிறான் சிங்கார வேலன். அன்னை கற்பகத்துக்கு நேர் தெற்கே வாயிலார் நாயனார் கோயில் கொண்டுள்ளார்.

கபாலிபெருமானுக்கு எதிரே தலை வாயிலின் வடபுறம் திருஞானசம்பந்தர் பூம்பாவையுடன் இருக்கிறார். கோவிலின் வடக்கு வெளிச் சுற்றிலே அலுவலகத்துக்கு எதிரே புனிதப் புன்னை மரம் இருக்கிறது. அரச கோபுரமென அழைக்கப்படும் கீழைவாயிலில் கூத்தாடும் பிள்ளையார் காட்சி தருகின்றார்.

இவ்வூருக்கே பெருமைதரும் திருவிழா அறுபத்துமூவர் விழாவாகும். அன்றைக்குச் சுமார் பத்து இலட்சம் மக்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வருகின்றனர். இப்பெருவிழாவையொட்டித் திருக்கோயிலினுள் இன்னிசை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் ஆகியவை மக்களுக்குக் கருத்து விருந்து படைக்கின்றன.

இப்பெருவிழாவைத்தவிர வைகாசித் திங்களில் வசந்தத் திருவிழாவும், ஆவணித் திங்களில் பன்னிரு திருமுறைப் பெருந் திருவிழாவும், புரட்டாசித் திங்களில் நவராத்திரித்திருவிழாவும், ஐப்பசித் திங்களில் கந்தச் சஷ்டித் திருவிழாவும், தைப்பூசத்தில் தெப்பத்திருவிழாவும், மாசித் திங்களில் கடலாட்டுத் திருவிழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

— — — —

உ

# சோதியே, சுடரே, சூழொளி விளக்கே !

அண்ணா சச்சிதானந்தம், M.A.,

காஞ்சீபுரம்.

தீபங்களை ஏற்றி இல்லங்கள் தோறும் வரிசையாக வைத்து இறைவனை ஒளிமயமாக வழிபடும் நாட்கள் தீபாவளித் திருநாளும் கார்த்திகைப் பெருநாளும் ஆகும். தீபங்களால் வழிபடுதற்குரிய (அர்ச்சனை செய்தற்குரிய) மாதம் கார்த்திகை மாதமாகும். 'தானே பரம்பொருள்' என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு தருக்கி நின்ற மாலயற்கிடையே திருவண்ணாமலை எனும் அருணாசலத்தில் (அருணம்-நெருப்பு, சிவப்பு) ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியொன்று கற்பனை கடந்த சோதியாகத் தோன்றிய நாள் கார்த்திகைத் திருநாளாகும். மால்அயனாலும் மற்றைய தேவராலும் முனிவர்களாலும் காணப்பெறாத அப்பெரும் பேரொளியே முழுமுதற் பரம்பொருளாகும்.

''சோதியே சுடரே சூழொளி விளக்கே'' என்பார் மாணிக்கவாசகர்.

''தீப மங்கள ஜோதி நமோநம'' என்பார் அருணகிரியார்.

ஐம்பூதங்களில் ஒன்றாகிய தீ, சூரியன், சந்திரன் அக்கினி என்ற மூன்றாக விளங்கிக்காணப்படுகிறது. இன்று புதிதாக வந்துள்ள மின்விளக்குகளை நான்காவதாகக் கொள்ளலாம். இவை அனைத்துமாகி இறைவன் விளங்குகிறான் என்பர் ஆன்றோர். அப்பர் பெருமான் ''தேச விளக்கெலாம் ஆனாய் நீயே'' என்பார்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய இவ்விறைவனைச் சேக்கிழார் பெருமான் ''அலகில் சோதியன்'' என்பார்.

இவ்வொளி வழிபாடு இன்று மட்டுமல்ல. சங்க காலத்திலும் இருந்தமையைத் தொல்காப்பியத்தில் கண்டுணரலாம்.

''கொடிநிலை வள்ளி கந்தழி என்ற
வடுநீங்கு சிறப்பின் மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''

(இதில் கொடி நிலை-சூரியன்; வள்ளி-சந்திரன்; கந்தழி-நெருப்பு) என்பதனால் சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவற்றை வழிபடும் வழக்கம் இருந்ததை அறியலாம்.

இனி இக்கட்டுரையில் தீயினுக்கும், தீவண்ணனாய் விளங்குகின்ற தேவதேவனுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளையும் ஒற்றுமைகளிடையே உள்ள சில வேற்றுமைகளையும் சிறிதே கண்டு ஞானமே உருவாகிய அந்த நாயகனைப் புறத்தே விளக்கேற்றி வைத்து வழிபடுவதுபோல் அகத்தேயும் விளக்கேற்றி வைத்து வழிபடுவோமாக!

(1) எந்த நாட்டினரும் எந்த மதத்தினரும் விரும்பிப் போற்றுவது ஒளியாகும். ஒளியை விரும்பாத உயிரினங்கள் எதுவுமே இருக்க முடியாது. கிறித்துவ மதத்தினரும் மெழுகு வர்த்தியை ஏற்றி வைத்து இறைவனை வணங்குவர். பிற மதத்தினரும் தீபங்களை வழிபடுவர். உருவ வழிபாட்டினரும் சரி, அருவ வழிபாட்டினரும் சரி, போற்றி வணங்கும் பொதுப் பொருள் ஒளி. அதனாற்றான் முழுமுதற் பரம்பொருளாகிய இறைவன் அனைத்து மதத்தவரும் வணங்குதற்பொருட்டு தீப மயமாகத் திருவண்ணாமலையில் தோன்றி நின்றான். அதுவும் சென்று வழிபடத் தேவையில்லை; இருந்த இடத்தில் இருந்துகொண்டே கண்டு வழிபடலாம்.

சமரச சன்மார்க்கம் கண்ட வள்ளலார் கூட ஜோதி தரிசனத்தையே தெய்வ தரிசனமாகக் கொண்டார்.


(2) புகையைக் கண்டு மலைக்குப் பின்புறம் நெருப்பிருக்கிறது என்றும் ஒளியைக் கண்டு மேக மண்டலத்திற்குப் பின் சந்திரனோ கதிரவனோ மறைந்து இருக்கிறது என்றும் உணரக்கிடைப்பது போல உலகில் இறைவனுடையஅருட்செயல்களைக் கொண்டு அவனை ஓர்ந்து உய்யலாம்.

(3) விறகு எரியும்போதுதான் அதில் மறைந்துகிடக்கும் ஒளி தீயாக வெளிப்பட்டுக் கண்ணுக்குப் புலனாகும். ஆனால் எரியாதபோது அது தெரியாது. அதைப்போல்தான் இறைவனும் மறைந்திருக்கிறான் என்பார் அப்பர் பெருமான்,

''விறகில்தீயினன் பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச்சோதியான்''

என்பது அப்பர் வாக்கு.

மாணிக்கவாசகரும் ''ஓராதார் உள்ளத்து ஒலிக்கும் ஒளியானே'' என்பார்.



சேலத்தில் நடந்த அரசுப் பொருட்காட்சியில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் அரங்கு, முதல் பரிசைப் பெற்றது. மாண்புமிகு தொழில் அமைச்சர் திருமிகு க. இராசாராம் அவர்கள் பரிசினை வழங்க, அறநிலையத்துறையின் சேலம் உதவி ஆணையர் திரு. க. ந. சொர்ணம் பரிசினைப் பெற்றுக் கொள்கிறார்.

எங்கும் இருக்கும் இறைவன் விறகில் தீ ஒளிந்திருப்பதைப் போல உணராத உள்ளத்தவர்களுக்கு ஒளிந்திருந்தும், கரவாடும் வன்னெஞ்சர்க்குக் கரந்திருந்தும் உறைகிறான்.

இக்காலத்தில் மின்கம்பிகளில் மின்சக்தி இருந்து கொண்டிருப்பது நம் கண்களுக்குப் புலனாகிறதா? விசையைத் தட்டினால் தான் விளக்குகள் எரிகின்றன. அதன் பின்னரே அதனை நாம் உணர முடிகிறது. அப்போது கூட அது கண்களுக்குத் தெரிவதில்லை. கம்பிகளில் உணர மட்டுமே முடிகிறது. விளக்குகள் வழியாக அச்சக்தி வெளிப்படுவது போல இறைவனுடைய சக்தியும் ஆலயங்கள் வழியாகவே மிக்கு வெளிப்படும்.

(4) நெருப்பு துன்பத்தையும் தரும்: இன்பத்தையும் தரும். அஃது ஊரையும் கொளுத்தும். தம் உடலையும் சாம்பலாக்கும். அதே நேரத்தில் உணவைச் சமைக்கும் ஒளியையும் கொடுக்கும். ஆனால் இறைவனோ தீயதைச் செய்யான். நல்லதையே நல்குவான். அதனால்தான் சுடருக்கு இல்லாத இந்நற் குணத்தை இறைவனிடம் கண்ட அப்பர் பெருமான் "நலஞ்சுடரே" என்றார்.

"நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி நலஞ்சுடரே" என்றும்

"செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதி" என்றும் குறிப்பிடுகிறார்.

"துணையதுவாய் வரும் தூயநற் சோதி" என்பார் திருமூலர்.

(5) தீயினுக்கு நல்லவர், தீயவர், ஏழை, செல்வந்தர், மனிதர், விலங்கு என்ற பேதம் இல்லை. யாவற்றையும் பாரபட்சமின்றி ஒரு சேரப் பொசுக்கும் தன்மையது. ஆனால் இறைவன் பொது நீக்கித் தனை நினைய வல்லார்க்கு என்றும் அருந்துணையாக இருந்து நலமே அருள்வான்.

(6) விண் முட்ட விறகுகள் அடுக்கி வைத்திருந்தாலும் ஒரு சிறு நெருப்புப் பொறி புகுந்து விட்டால் அனைத்தும் சாம்பலாகிப் போகும். அது போல இறைவனாகிய ஒளியை உள்ளத்து ஏற்றி வைத்தால் அனைத்துப் பாவங்களும் அழிந்து போகும்.

"விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில், அவை ஒன்றும்இல்லையாம்!
பண்ணிய வுலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே!

(அப்பர் தேவாரம்)

(7) ஆயின் விறகில் தோன்றிய தீ விறகினுடனே தானும் அழியும். ஆனால் இறைவனாகிய சோதி அழியாதது. காரணம் அது எதினின்றும் தோன்றியதல்ல அதனுடனே அழிவதற்கு.

அஃது ஆதியந்தம் இல்லாத அருட்பெருஞ்சோதி! தான் அழியாததோடல்லாமல் தன்னைச் சரணடைந்த அடியார்களையும் அழியவிட மாட்டான்; அவர்களுடைய பாவத்தை மட்டுமே அழிப்பான்.

*(8)* ஓர் அறைக்குள் சிறு தீபத்தை ஏற்றி வைத்தால் போதும். இதன் ஒளி அறை முழுவதிலும் வியாபித்து நிற்கும். அதைப் போல்தான் இறைவனாகிய தீபத்தை அகத்தே ஏற்றி வைத்தால் அவன் நம் மனத்தில் மட்டுமின்றி உலகவுயிர்கள் அனைத்திலும் ஏனைய பொருள்களிலும் வியாபகமாய் நிற்பதை உணரலாம். அவ்விதம் உணர்ந்தபின் எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணுகின்ற எண்ணம் உண்டாகும்.

*(9)* தனக்குவமை இல்லாத தலைவனாகிய இறைவனுக்கு ஒருவாறு அகல்விளக்கைக் குறிப்பிடலாம்.

சுடர்—சிவம் (சி) }
ஒளி—சக்தி (வ) } பதி

திரி—உயிர் (ய) பசு


நெய்—கன்மம் } (ந) }
அகல்—மாயை } } பாசம்
இருள்—ஆணவம் (ம) }

## உங்களுக்குத் தெரியுமா?

பெரியபுராணம் போற்றும் தனி அடியார் அறுபத்து மூவரில் ஒரு நாயனார் பட்டத்து இராணியின் மூக்கினை அரிந்து புகழ்கொண்டவர். மற்றொரு நாயனார் பட்டத்து யானையைக் கொன்று புகழ்கொண்டவர். அந்த நாயன்மார்கள் எவர் என்பதும், எதற்காக அவ்வாறு செயல்பட்டார்கள் என்பதும் உங்களுக்குத்தெரியுமா? தெரியாதவர்கள் அடுத்தப் பக்கத்தைப் புரட்டுங்கள்; விடை தெரியும்.

திரி அழிந்து கொண்டே வரும். நெய்யும் குறைந்து கொண்டே வரும். அதுபோலவே நாமும் ஊனினை உருக்கியும் உள்ளொளியைப் பெருக்கியும் ஊனில் உயிர்ப்பை ஒடுக்கியும் ஒண்சுடராகிய ஞான விளக்கினை ஏற்றுதல் வேண்டும்.

*(10)* இறைவனுக்கு அகல்விளக்கு ஒருவாறு பொருந்தினாலும் அகல்விளக்கு, திரியும் நெய்யும் இருக்கிற வரையில்தான் எரியும். ஒளி குறைந்து கொண்டே வந்து பின்பு அணைந்து விடும். ஆனால் இறைவனாகிய விளக்கு வளர்கின்ற விளக்கு. அதனாலேயே இறைவனை ''ஒளிவளர் விளக்கே'' என்றார் சேந்தனார்.



ஸ்ரீ பெரும்புதூர் சுவாமிகள் பரமஹம்ச எதிராஜ ஜீயர் அண்மையில் ஸ்ரீ வில்லிபுத்தூர் நாச்சியார் தேவஸ்தானத்திற்கு வருகை புரிந்தார். ஆலயத்தின் தக்கார் திரு A.S. சீனிவாசாச்சாரியார், மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு தாமரைக்கனி ஆகியோர் சுவாமிகளை வரவேற்றுச் சிறப்பித்தபொழுது எடுக்கப்பட்டது இப்படம்.

## விடை இதுதான்

பட்டத்து இராணியின் மூக்கினை அரிந்து புகழ்கொண்டவர் செருத்துணை நாயனார். இவர் திருவாரூரை அடுத்து வடகிழக்கில் 5 கி.மீ. தொலைவில் இன்று திகழும் தஞ்சனாவரத்தில் தோன்றியவர். திருவாரூர்க்கோயிலில் இறைத் தொண்டில் ஈடுபட்டிருந்த இவர், காடவர் கோன் கழற்சிங்கனாரின் பட்டத்துராணி இறைவனுக்குப் படைக்கவைக்கப்பட்டிருந்த புதுமலரை முகர்ந்து சிவகுற்றம் புரிந்தார் என்பதனால், வாள்கொண்டு பட்டத்துராணி எனவும் பாராது அவருடைய மூக்கினை அரிந்தார்.

பட்டத்து யானையைக்கொன்று புகழ்கொண்டவர் எறிபத்தநாயனார். இவர் கரூரில் கோயில் கொண்டிருக்கும் ஆனிலைப் பெருமானுக்குத் தொண்டு புரிந்து வாழ்ந்தவர். புகழ்ச்சோழவேந்தரின் பட்டத்து யானை, இறைவனுக்குப்படைக்கக் கொண்டு செல்லப்பட்ட சிவகாமியாண்டார் என்ற அடியவரின் பூக்குடலையைத் துதிக்கையால் பற்றிச் சிதைத்தமையைக்கண்டு, கோபம்கொண்ட அவர் யானையைக் கொன்று, தடுக்கவந்த பாகனையும், கொன்றார். சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்படும் பொருள்களின் தூய்மையைப் பேணிப் பாதுகாத்தலும் சிவனடியார்களின் கடமையாவதை இவ்விரு நாயன்மார்களின் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

---

திருஞானசம்பந்தரும் ''தொடர்ந்திலங்கும் சோதியே'' என்றார்.

*(11)* அவ்வகல் விளக்கு ஒளி குறையும் தருணத்தில் திரியைத் தூண்டிவிட்டால் மிகவும் பிரகாசமாகச் சுடர் விட்டெரியும். அதேபோன்று நாம் அன்பு மேலிட்டு அவனுடைய நாமங்களை உச்சரிக்க உச்சரிக்க நம் உள்ளத்தே நன்றாகப் பிரகாசிப்பான். அதனால்தான் ''தூண்டு சுடரனைய சோதிகண்டாய்'' என்பார் அப்பர் பெருமான்.

*(12)* குழந்தைப் பருவத்தில் நெருப்பு சுடுமென்று நமக்குத் தெரிவதில்லை. அஃது அழகாகச் சிவப்பாக இருக்கிறதே என்று எண்ணித் தொட்ட பிறகே 'அது சுடும்' என்று உணர்கிறோம். அதைப் போல்தான் இறைவனையும் ஏட்டறிவாலும் சுட்டறிவாலும் உணர முடியாது. பட்டறிவால் மட்டுமே- அன்பினால் அனுபவப்பட்டே அறிய முடியும்.

*(13)* ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகளை ஏற்றலாம். அதுபோல முழுமுதற் கடவுளிடத்திலிருந்து மும்மூர்த்திகள் முதலான பல தெய்வ வடிவங்கள் தோன்றுகின்றன.

*(14)* ஏற்றப்பட்டுள்ள விளக்குகள் பலவற்றுள் ஆதி (முதன்முதலாக ஏற்றப்பட்டது) எது என்று கேட்டால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கினைச் சுட்டிக் காண்பிப்பர். அதே போல்தான் எது முதல்தெய்வம், எது ஆதிமூலம் என்று கேட்டால் ஒவ்வொரு (சமயத்த)வரும் ஒவ்வொரு தெய்வத்தைக் கூறுவர். இதனால் அனைத்து தெய்வங்களும் ஒரே தெய்வத்தின் வடிவங்களே என்பதை உணரலாம்.

*(15)* ஏன் ஒரு விளக்கிலிருந்து பலவிளக்குகள் ஏற்றப்பட வேண்டும்? இன்னும் ஒளி விளக்கம் அதிகம் கிடைக்கும், இருள் மாயை இன்னும் அறவே ஒழியும் என்பதற்காகத்தான்!

அதேபோல ஒரே தெய்வம் ஏன் பல வடிவங்களைத் தாங்கி வரவேண்டும்? நாம் இன்னும் ஒளி (அறிவு) விளக்கம் பெற வேண்டும். அருள்பெற்று மும்மல இருள் முழுதும் மாயவேண்டும் என்ற கருணையால்தான்!

*(16)* நெருப்பைக் கொண்டு தங்கம் முதலான உலோகங்களை உருக்கலாம். சுத்தம் செய்யலாம். அதைப்போல இறைவனாகிய நெருப்பைக் கொண்டு நம் மும்மல அழுக்குகளை நீக்கித் தூய்மை பெறலாம்.

*(17)* நெருப்பைக் கண்டு பனிக்கட்டி போன்றவை உருகும். இறைவனின் அருள் திறத்தை உணர்ந்து அடியார்களின் நெஞ்சமும் உருகும்.

*(18)* வைத்தியர்கள் சில ஆறாத புண் முதலிய நோய்களைத் தீயால் சுட்டுத் தீர்ப்பார்கள். அதைபோல இறைவனும் அடியார்களுக்குச் சில கடுஞ் சோதனைகளைக் கொடுத்துத் தீவினைகளை அறவே நீக்கியருள்வான். ஆனால் அச்சோதனைகளைத் துன்பங்களாகக் கொள்ளாமல் நல்லனவாகவே அடியார்கள் ஏற்றுக் கொள்வர்.

*(19)* தட்டு முட்டுச்சாமான்கள் மிகுந்த ஓர் அறையிலே விளக்கிருந்தால்தான் அவையனைத்தையும் தனித்தனியே கண்டு அறிய முடியும். கண்டபடி இறைந்து கிடக்கும் சாமான்களையும் ஒழுங்காக அடுக்கி வைக்க ஒளியிருந்தால்தான் முடியும். இருளாக இருந்தால்? அறை முழுதும் இருளொன்றே தெரியும். வேறெதுவும் தெரியாது. நூறுபொருள்கள் இருந்த இடம் 'இருள்' என்ற ஒரு பொருள் மட்டுமே உள்ள இடமாகத் தோற்றமளிக்கும். அறையினுட் சென்றாலோ தட்டுமுட்டுச் சாமான்களால் தடுக்கப்பட்டும் இடிக்கப்பட்டும் கீழ் தள்ளப் பட்டும் துன்பப்பட நேரிடும்.

இறைவனாகிய ஒளியின் துணையோடு நம்மையும் நம்மைச்சார்ந்த உலகையும் காணவேண்டும். அப்போதுதான் தெளிவு பிறக்கும். உலகில் சீர்திருத்தங்களையும் நன்னெறிகளையும் இயற்றவும் போதிக்கவும் வேண்டுமென்றாலும் இறைவன் துணையோடு செய்தால்தான் அவை நெறிப்படும். நமக்கும் இடரேதும் வாராது. நாம் செய்கின்ற சமுதாயத்தொண்டுகளும் சிறக்கும்.

இறைநெறியினின்று பிறழ்ந்து செய்தால் இருளில் நடமாடுவோனுக்கு ஏற்படும் கதியே உண்டாகும்.

### முடிவுரை

இப்படிச் சிந்திக்கச் சிந்திக்கப் பல ஒற்றுமைகள் இன்னும் புலனாகும். அதனால் தான் இறைவனை,

''தூங்கானைமாடச் சுடர்கொழுந்தே'' என்று
அப்பர்பெருமானும்
''அருவமும் உருவு மாகி அனாதியாய்ப் பலவாய்
யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு'' என்று
கச்சியப்பரும்,

''சோதியே சுடரே சூழொளி விளக்கே'' என்று மணிவாசகரும் பிறரும் போற்றி வணங்கினர் என்பது தெரிகிறது.

# கிருட்டிணன் தூது

டாக்டர் த. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

பாரதப் போரில் பாண்டவர் வெற்றிக்குப் பெரிதும் காரணமாவது கண்ணனின் சூழ்ச்சித் திறமா? அல்லது கர்ணனின் கொடைத்திறமா? என்று ஒரு கேள்வியைக்கேட்டு, ஒரு பட்டி மன்றத்தை நடத்துவோம் ஆனால், இருபக்கமும் எடுத்துவைக்கத்தக்க கருத்துக்கள் ஏராளமாக உள்ளன. கண்ணனின் சூழ்ச்சித்திறத்தைப் பின்னுக்குத்தள்ளி, கர்ணனின் கொடைத்திறத்தைப் பாண்டவர் வெற்றிக்குப் பெரிதும் காரணமாக்கிக் காட்டும் பகுதியே இப்போது நாம் காணப்போகும் கிருட்டிணன் தூதுச் சருக்கத்தின் கடைசிப்பகுதி களாகும்.

கர்ணன் பிறக்கும்போதே மார்பில் கவசமுடனும் காதுகளில் கனகக்குண்டலங்களுடனும் சூரியனின் அமிசமாகச் சூரியனின் புத்திரனாகப்பிறந்தவன். அம்மார்புக் கவசமும், கனக குண்டலங்களும் கர்ணனிடம் திகழும் வரை, எத்தனைக்காலம் போர் செய்தாலும் அவனைப் பாண்டவர்கள் வெற்றி கொண்டுவிட முடியாது என்பது மட்டுமல்ல, அர்ச்சுனனும் கர்ணனால் கொல்லப்பட்டுவிடுவான். அர்ச்சுனனின் உயிரைக்காப்பதோடு, அறம் நிலைக்கப்பாண்டவர்களை வெற்றி பெறச்செய்வதற்காகவே, கண்ணன் அவதாரம் செய்திருக்கிறார். விதுரனின் விஷ்ணு வில்லை ஒடிக்கச்செய்து, துரியோதனின் வெற்றி வாய்ப்பைக் குறைப்பதற்குக் கண்ணனின் சூழ்ச்சித்திறமே பெரிதும் பயன்பட்டது. இப்போது பாண்டவர்களின் வெற்றிக்கு மேலும் தடையாக இருப்பன கர்ணனின் மார்புக் கவசமும், கனக குண்டலங்களும். இவற்றைப் பறித்தால் அன்றித் துரியோதனனை ஜெயம்கொள்வது என்பது நடக்கமுடியாத ஒன்று. கண்ணனைத் துரியோதனனிடமிருந்து பாண்டவர் பக்கம்சேர்த்து விட்டால், வெற்றி பாண்டவர்களுக்கென்பது நிச்சயம். அதனால்தான் கண்ணபெருமானும் கர்ணன் பாண்டவர்களுக்கு உடன்பிறந்த மூத்தவன் ஆவதை உணர்த்தி, ''வந்தினி தம்பியர் தம்மொடு சேர்க'' என அறிவுறுத்தியும் பார்த்தார். ஆனால் கண்ணனோ, செஞ்சோற்றுத்தருமமேபெரிது எனக் கூறி, கண்ணனின் அறிவுரையை ஏற்க மறுத்து விட்டதை சென்ற இதழில் பார்த்தோம்.

இப்படிப்பட்ட ஒருநிலையில், கர்ணனின் வலிமையைக் குலைக்க, அவனுடன் ஒட்டிப் பிறந்த மார்புகவசத்தையும் காது குண்டலங்களையும் பறிப்பதல்லால் வேறு வழியே இல்லை என்பது கண்ணபெருமானுக்குத் தெரிகிறது. மாவீரன் ஆகிய கர்ணனிடம் வீரத்தைத் துணைகொண்டு அவைகளை பறித்துவிடவும் முடியாது. வேறு என்ன தான் வழி என்பதாகச்சிந்திக்கும் கண்ணபெருமான் கர்ணனின் கொடை உள்ளத்தையே பயன்படுத்தி எந்த ஒரு சிரமமும் இல்லாமல் யாசித்தே அவைகளைப்பெற்றுவிட முடியும் என்று முடிவு செய்து கர்ணனிடம் யாசித்துக் கவசகுண்டலங்களைப் பெறும் பணிக்காகத்தான் இந்திரனைத் தான் இருக்கும் இடத்திற்கு அழைத்தார். அவனும் வந்து வணங்கிநின்றான்.

இந்திரன் தேவர்களுக்கெல்லாம் தலைவன். கேட்டதெல்லாம் கொடுக்கும் கற்பகத்தருவும் காமதேனுவும் அவன் வசம் இருக்கின்றன. முப்பத்துமுக்கோடி தேவர்களுக்குத் தலைவன் ஆகிய இந்திரனை, கர்ணனிடம் போய் யாசித்துக்கவச குண்டலங்களைப் பெற்றுவரக் கூறினால் அவன் அதற்கு ஒப்புவானா என்றால் அவன் ஒப்பமாட்டான். வெறும்தேவர் தலைவனான இந்திரனாக மட்டுமே இருந்தால் அவன் ஒப்புக்கொள்ளத்தான் மாட்டான். ஆனால், அவனோ அர்ச்சுனனுக்குத் தந்தை. துருவாச முனிவர் உபதேசித்த மந்திரத் தின்படி, குந்திக்கு அர்ச்சுனனை மகனாகத் தந்தவன்தான் இந்திரன். ஆகவே தன் மகனுக்குத்தான் வாழ்வு நல்க, இந்திரன் கர்ணனிடம் போய் யாசிக்க ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். மேலும், கர்ணனிடம் அர்ச்சுனனின் உயிர்கொல்லும் நாகாத்திரம் போய் அடைக்கலம் பெற்று தங்கி இருப்பதற்கும் காரணமாக அமைந்துவிட்டவனும் இந்திரன்தான். அர்ச்சுனன் காண்டவ வனத்தை எரியூட்டியபோது தன் நண்பன் தக்ககனின் மகனாயிற்றே என்று பரிதாபப்பட்டு, அசுவசேனன் என்ற நாகத்தைக் காப்பாற்றினான். அந்த நாகமோ தன் தாயைக் கொன்ற அர்ச்சுனனைப் பழிவாங்குவேன் என்று சபதம் பூண்டு, கர்ணனிடம் போய் அடைக்கலம் கோரி, நாகாத்திரமாக அமைந்துள்ளது. ஆகவே அன்று நாகத்தைத் தப்பவிட்டு, அர்ச்சுனன் உயிர்க்கு கேடு சூழ்ந்த இந்திரனே, அந்நாகாத்திரம் தஞ்சம் கொண்டு விளங்கும்கர்ணனிடம் போய், கர்ணனின் உயிருக்குக்காவலாகவும் அர்ச்சுனனுடைய உயிருக்கு எமனாகவும் விளங்குகின்ற கவசகுண்டலங்களை யாசகமாகக் கேட்டுப்பெற்று வரவேண்டும் என்பது கண்ணபெருமான் செய்த முடிவு.

ஆகவேதான், இந்திரன் வந்ததும் முதலில் அவன் காண்டவன தகனத்தின்போது நாகத்தைத் தப்பவிட்ட குற்றத்தைப் பக்குவமாக எடுத்துக் காட்டுகிறார் கண்ணபெருமான்.

''கிரியின் சிறகை யரி படையோய் கேண்மோ!
ஆண்மைக்களமீதில்
வரிவெஞ் சிலைக்கை விசயனுக்கு மாறாய்
முனிந்து வருகின்ற
எரியுங் கனல்வாய் விடஅரவுஒன்று இவனுக்கு
பகையான
அரியின் புதல்வன் தனக்கொருபேரம்பா
கியது யாரறியார்''
(கிருட்டிணன் தூது 232)

## மார்கழியில் பாவையர் நோன்பு

நாடு செழிக்க மழை வேண்டியும், வாழ்க்கை செழிக்க இறையன்பராகிய நல்ல கணவரை வேண்டியும் மார்கழி மாதம் முழுதும் கன்னிப் பெண்கள் திருப்பாவை, திருவெம்பாவை பாடி நோன்பிருப்பர். ஆண்டாள் ஆற்றிய நோன்பினால் அவர் விரும்பியவாறே சீரங்கநாதரை மணம் முடிக்கப் பெற்றார் என்பது வரலாறு.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம்
ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோர்
எம்பாவாய்"
(திருப்பாவை. 29)

"எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள்
சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன்நீ
நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக்கேலோர்
எம்பாவாய்."
(திருவெம்பாவை. 19)

---

''அர்ச்சுனனுக்கு மிகவும் பகைவனாக விளங்கும் சூரியனுடைய மகன் கர்ணனிடம் கொடிய பாம்புஒன்றுஅம்பாக மாறி அமைந்திருப்பதை அவனியில் யார்தான் அறியமாட்டார்கள்.'' என்று கூறும் கண்ணபெருமான், ''அந்தப்பாம்பைத் தப்பவைத்து நீ தானே அந்தக் குற்றத்தைப் புரிந்தாய்'' என்பதையும் கூறாமலே கூறிவிடுகிறார். அன்றைக்கு அந்தக் குற்றத்தைச்செய்த நீதான் இன்றைக்குக் கர்ணனிடம் போய் கவசகுண்டலங்களையும் யாசித்துப்பெற்று வரக்கூடிய பரிகாரத்தையும் செய்யவேண்டும். ''நான் அமரர் தலைவன், அமர்ந்த இடத்திலேயே எல்லாம் தரக்கூடிய கற்பக மரமும், காமதேனுவும் கொண்டவன். நான் போய் யாசிப்பதா?'' என்று இந்திரன் நினைக்கவும் கூடும் என்பதால், அவன் மைந்தன் அர்ச்சுனனைக்காப்பாற்ற வேறு வழியே இல்லை என்பதையும் கண்ணபெருமான்

''மைந்தற்குறுதி நீ வேண்டின் வல்லே முனிவர்
வடிவாகி
சந்தப்பனுவல் இசைமாலை தானாகரனை
விரைந்தெய்தி
அந்தக்கவச குண்டலங்கள் அளிப்பாய் என்
றால் அவனொன்றும்
இந்தப்புவியில் மறுத்தறியான் உயிரே
எனினும் ஈந்திடுவான்''
(கிருட்டிணன் தூது 236)

என்பதாகக் கூறுகிறார். இந்திரன் தன் சுய உருவில் போக நிச்சயம் நாணங்கொள்ளக் கூடும் என்பதனால்தான் முனிவராக உருமாறிப்போய் யாசிக்கச் சொல்லுகிறார் கண்ணபெருமான்.

கண்ணனின் கொடைத்திறத்தைக் கண்ண பெருமான் மனம் திறந்து இந்திரனிடத்தில் இந்த நேரத்தில் எடுத்துக்கூறிப்பாராட்டுகின்றார். உலகத்திலே இருக்கின்ற எந்தப் பொருளேயாயினும், அதனைக் கர்ணன் கொடுக்கமறுக்கமாட்டான். கண்ணனுடைய உயிரையே தரும்படி கேட்டாலும் மகிழ்ச்சியாகக் கொடுத்துவிடுவான். இன்னாருக்குத் தான் தானம் புரிவது என்ற வரன்முறை கர்ணனிடம் கிடையாது. அவன் கலைஞர்களுக்கு வழங்குகின்றான். முனிவர்களுக்கு வழங்குகின்றான். தேவர்களுக்கும் வழங்குகின்றான். துறவிகளுக்கும் வழங்குகின்றான். தம் குறையைத்தேடி வந்து சொல்பவர்களுக்கு வழங்குவதோடு சொல்லாதவர்களுக்கும் வழங்குகின்றான். எல்லோருக்கும் வாரிவாரி வழங்கக்கூடிய அரிய கொடை வள்ளல் கர்ணன் ஒருவனே என்பதாகக் கர்ணனின் கொடைப் பெருமையைக் கண்ண பெருமான் எடுத்துக்கூறி ''போய் நீ கேட்டுக்கர்ணனின் கவசகுண்டலங்களைக் கவர்ந்துவா; தொகை தொகையாகத் தேர்களை ஊர்ந்து பூலோகத்திலுள்ள அரசர்கள் எல்லோரும் ஒரு சேர திரண்டுவந்தாலும், உன் மகன் அர்ச்சுனன் அவர்களையெல்லாம் வென்று புகழ் கொள்ளுமாறு நான் செய்கிறேன்'' என்று உறுதியளித்தவுடன், மைந்தனுக்கு உறுதிவேண்டி, இந்திரனும் கிழ அந்தணன் வடிவம் கொண்டு கர்ணனின் அரண்மனை வாயிலைப்போய் அடைகிறான்.

கங்கை நீரின் நுரைபோல முடிவெளுத்து முகம் சுருங்கிய வயோதிகத் தோற்றத்துடன் கையிலே தடியூன்றியவனாய் இந்திரன் வேடம் பூண்டு, கர்ணனின் மாளிகையை அடைகிறான். ''இரவலர் சொல்லாடப் போம் உயிர்'' என்பார் வள்ளுவர். மானமுள்ள மனிதன் ஒருவன், தனக்கு ஒன்று வேண்டும் என ஒருவரைப்போய் அடைந்து ஒருசொல் சொல்வதற்குள் அவனுடைய உயிரே அவனைவிட்டுப்பறப்பது போன்ற பெரும் துன்பம் நேரும் என்பதைத்தான் வள்ளுவனார் தம் குறளில் கூறியுள்ளார். தனக்காக அல்லாமல் தான் வளர்க்கும் பசுவிற்காகக்கூட, எளிதில் கிடைக்கக்கூடிய தண்ணீரையும் இரக்கக்கூடாது என்பார் வள்ளுவர். மனிதரினும் மேம்பட்ட தேவர்களுக்கெல்லாம் தலைவனாகியவன் இந்திரன். யாசகம் கேட்கும் பொருட்டு வேடம்பூண்டு கர்ணனின் வாயிலை அடைந்த அவனுடைய முடி கங்கை நுரைபோல் வெளுத்ததற்கும் முகத்தில் சுருக்கங்கள் விழுந்தமைக்கும் காரணம், அவன் தனக்கு இத்தகைய நிலை ஏற்பட்டதே என்று எண்ணிய கவலையால் ஏற்பட்டதாகவும் கூட இருக்கலாம். ஆகவே தான் இராஜநடை நடக்கவேண்டிய இந்திரன், நடக்க முடியாமல் தள்ளாடி, கூன் விழுந்த முதுகு மேலும் சாய்ந்து, தான்கீழே விழுந்துவிடாமல், தடியூன்றியவனாய் கர்ணமாமன்னனின் வாயிலை அடைந்து வாயிற் காவலனை ஏறிட்டுப்பார்க்கிறான்.

வயோதிக அந்தணனின் வாடிய தோற்றத்தைக்கண்டதுமே, யாசகத்திற்காகத் தான் வந்திருக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்ட வாயிற்காவலன், ''இத்தனை நேரமும் வந்தவர்க்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல் கர்ணன், இப்பொழுதுதான் அரண்மனைக்குள்ளே சென்றார்'' என்று கூற, ''நானும் அதிகாலையில் தான் புறப்பட்டேன். நடக்கமுடியாத காரணத்தால் இங்கு வர இவ்வளவு காலம் ஆகிவிட்டது'' என்பதாக அந்தண இந்திரன், தன் தாமதத்திற்கான பொய்க் காரணத்தையும் பொருத்தமாகவே எடுத்துரைக்கிறான். கர்ணவள்ளலின் வான்கொடைக்குக் கால தாமதம் ஒருதடையே இல்லை. வாயிற்காவலர்கள் மூலமாக ஒரு வயோதிக அந்தணர் யாசகத்திற்காக வந்திருப்பதைக்கேள்விப்பட்ட கர்ணனே,

# தொண்டர் குலம்

இறைவனை வணங்கும் அடியார்கள் எல்லாம் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது தொண்டர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறியிருக்கிறார் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய பெரியாழ்வார்.

"தொண்டக்குலத்தில் உள்ளீர்வந்தடிதொழுது
ஆயிரம் நாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு
பல்லாயிரத் தாண்டு என்மினே.''

என்னும் அவர்தம் திருப்பல்லாண்டுப் பாடலைக் காண்க.

வாசல் வரை வந்துவரவேற்றதோடு, அவரைப் பொன்னாசனத்திலேயும் அமர்த்தி அன்புடனே பார்த்து ''என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்'' என்பதாக உறுதிகூறுகிறான். ''எனக்கு விருப்பமானதைக் கொடுப்பது என்பது கற்பக விருட்சத்திற்கும் கடினமானதாயிற்றே'' என்பதாக கூறி தனக்கு வேண்டியதைக் கேட்பதற்குத் தயக்கம் காட்டுகின்றான் கிழவேதியன். உடனே கர்ணனும், :''தயங்கவேண்டாம், என்னுயிரையே நீர் கொடுக்கும்படி கேட்டாலும் கூட மன மகிழ்வோடு தருகிறேன் நான். அப்படிக்கொடுக்காவிட்டால் போரிலே புறமுதுகு காட்டுகிறவன் போய்ச்சேருகிற நரகம், எனக்கு வாய்க்கட்டும்'' என்பதாகச் சத்தியமும் செய்கிறான் கர்ணன்.

சத்தியம் செய்பவர் தாம் பெரிதும் மதிக்கும் தெய்வத்தின் மீதோ, தெய்வத்திற்கொப்பான மாந்தர்கள் மீதோ, மற்ற பொருள்கள்மீதோ சத்தியம் செய்வது நம் நாட்டிலே காண்கின்ற பழக்கம்தான். தாய் மேல் சத்தியம் என்றும் தமிழ்மேல் சத்தியம் என்றும் தமக்குப் பிரியமானவற்றின்மேல் சிலர் சத்தியம் செய்து தரப்பார்க்கிறோம். வேறு எவற்றின் மேலும் எவர்மீதும் சுயநலவாதிகள் எளிதில் சத்தியம் செய்து கொடுத்து ஏமாற்றிவிடக் கூடும் என்பதனால், அத்தகையவர்களிடம் தங்கள் மேல் தாங்களே சத்தியம் செய்து தரக்கேட்டு அவர்களை நம்புவதையும் நடைமுறையிலே பார்க்கிறோம். புறநானூற்றிலே தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியப்பாண்டியன், தான் பெரிதும் மதித்த புலவர்கள் போற்றும் பாக்கியத்தின் மேலும், தன் செங்கோல் அரசின் மீதும், தன் கொடைக்குணத்தின் மீதும் ஒருசேர சத்தியம் செய்தமையை,

''அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமோ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழற்காணா து
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலே னாகுக.
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவறை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே''
(புறம்.72)

என்ற பாடற்பகுதி நமக்குக்காட்டுகிறது.

கர்ணனின் கொடையை இதுவரை எவரும் சந்தேகித்தது இல்லை. வயோதிக அந்தணனுக்கு அத்தகைய ஒரு சந்தேகம் வந்துவிட்டதே என வருத்தம் கொண்ட வள்ளல் கர்ணன், தான் கேட்டது கொடுக்காவிட்டால், வீரம் இல்லாத கோழைகள், போரில் புறமுதுகிட்டுப்போய் அடையும் நரகத்திற்கு நானும்போகக்கடவேன் என்பதாகச்சத்தியம் செய்து ''நீ மெய்யுயிர் விழைந்திரந்தாலும் கருத்தினோடு உனக்களித்திலேன் எனில் எதிர் கறுத்தவர் கண்ணினைசிவப்ப, உருத்த போரினிற் புறந்தரு நிருபர் போயுறு பவம் உறுவன்'' என்று தான் பெரிதும் மதிக்கும் தன்னுடைய வீரத்தையே சான்று காட்டிக் கர்ணன் சத்தியம் செய்து தருவதைக்காண்கிறோம். இத்தகைய கர்ணனின் வள்ளல் தன்மையைப் பாராட்டும் விதத்தில்தான்

''போர்தலை மிகுந்த ஈரைம் பதின்மரோடு
துப்புத்துறைபோகிய துணிவுடை ஆண்மை
அக்குரன் அனையகை வண்மையையே''
(பதி.14)

என்று பதிற்றுப்பத்து என்ற சங்க இலக்கியமும் பாராட்டுப்பத்திரம் வாசிப்பதைக் காண்கிறோம்.

காலையில் பார்த்துக்கேட்கிறபோதுமாலையில் தருவதாக உறுதிகூறி வரச்சொல்லும் வள்ளல்கள் பலர், மாலையில் போய்ப்பார்த்துக் கேட்கிறபோது ''எப்போது சொன்னேன்? கொடுப்பதற்கு இங்கே என்ன கொட்டிவைத்திருக்கிறதா? நான் என்ன இளிச்சவாயனா?'' என்று தம் வார்த்தையைத் தாமே மறுத்து ஏய்க்கும் கலியுகத்திலே வாழ்கிறோம் நாம். ஔவையாரும் கூட அத்தகைய கஞ்ச வள்ளல் ஒருவனிடம் கால்கடுக்க நடந்து தாம் பெற்ற அனுபவத்தை

''கரியாகிப் பரியாகிக் காரெருமை தானாய்
எருதாய் முழப்புடவை யாகித் -திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்து கால்
ஓய்ந்ததே
கோரைக் கால் ஆழ்வான் கொடை''

எனப்பாடியிருப்பதைப்படிக்கிறோம்.. அண்மைக் காலத்திலே வாழ்ந்திருந்த புலவர் ஒருவர், தமக்கு வாழ்வு கிடைக்கும் என நம்பி வள்ளல் எனப்பெயர் பூண்டு விளங்கிய போலிவள்ளல் ஒருவனைப் போய்ப் பார்த்து அவனைப்பலவாறு புகழ்ந்துரைத்தார். புலவர் ''அறிஞர்க்கெல்லாம் அறிஞரே.'' என்று புகழ, வள்ளலும் தம் பணியாளைப் பார்த்து ''இவருக்கு தங்கச்சங்கலிகொண்டுவந்து தா'' என்றுகட்டளையிட்டார். ''மன்னர்களுக்கெல்லாம் நீங்களே மாமன்னர்'' என்று புலவர் மேலும் புகழ, வள்ளலும் தம் பணியாளிடம் ''இவருக்கு ஒரு வீட்டையும் எழுதிக் கொடுங்கள்'' என்றார். வள்ளலின் கட்டளைகளால் எல்லை மீறிய மகிழ்ச்சி கொண்ட புலவர் ''உங்களைப்போல் ஒரு குணவானைப்பார்த்ததே இல்லை'' என்பதாகப்புகழ்ந்தார். உடனே வள்ளலும் ''புலவர் போகும்போது நடந்தாபோவார்! ஒரு வண்டிக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று ஆணையிட்டார். வள்ளலின் ஆணைக்கேற்ப ''தங்கச்சங்கிலி வரும், வீட்டுப்பத்திரம் வரும், காரோ தேரோ வரும்'' என்பதாகப் புலவர் கற்பனையில் மிதந்துகொண்டிருக்க, வள்ளல் ஆணையிட்ட ஒன்றும்கூட அவரைத் தேடி வரவில்லை. பொழுது போகபோக, புலவருக்குப்பசியும் ஏறஏற, பொறுமை மீறிய புலவர் வள்ளலிடம்''ஐயா, தாங்கள் ஆணையிட்ட ஒன்றையும் கூட தங்கள் பணியாளர்கள் கொண்டுவந்து தரவில்லையே!'' என்பதாகமுறையிட்டார். அதற்கு அந்த வள்ளல் சொன்னாராம். ''எப்படி அவர்கள் கொண்டு வந்து தருவார்கள்? என்னுடைய காதுகளுக்கு இதமாக நீங்கள் சில வார்த்தைகளைச்

## இராதா கிருட்டிணர் திருக்கோலம்



பேர்படைத்த விசயனுடன் மும்மை நெடும் பிறவியிலும் பிரியானாகிச்
சீர்படைத்த கேண்மையினாற் தேரூர்தற் கிசைந்தருளும் செங்கண் மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் படையெடேன்அமரில் எனப் பணித்த கோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார் பிறவாழிக் கரைகண்டாரே

—கிருட்டிணன் தூது, கடவுள் வணக்கம்

சொன்னீர்கள். உங்களுடைய காதுகளுக்கும் இதமாக இருக்கட்டுமே என்று நானும் சில வார்த்தைகளைச்சொன்னேன்'' என்றுகூறிப் புலவரை அதிர்ச்சியுறச்செய்தாராம். வள்ளலிடம் ஏமாந்த அந்த வயிற்றெரிச்சல் தாளாமல் புலவர், தம்குற்றம்கூறிப் பாடியதைப்போல அமைந்திருக்கும் கீழ்க்கண்ட பாடலை நீங்களும் தான் படித்துப்பாருங்களேன்!

''கல்லாத ஒருவனை நான் கற்றாய் என்றேன்
காடெறியும்மறவனைநான் நாடாள்வாய்என்றேன்
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியே றேன்றேன்
மல்லாரும் புயன்என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை என்றான்
யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேனே!''

இப்படிப்பட்ட போலிகள் வாழக்கூடிய கலியுகத்திலே வாழக்கூடிய நமக்கு, துவாபர யுகத்திலே வாழ்ந்து சிறந்து விளங்கிய கர்ணனின் கொடைப் பெருமையைப் புரிந்துகொள்வது கடினம் தான். ''உயிரைக்கேட்டாலும் உறுதியாய்க் கொடுப்பேன்'' என்று சத்தியம் செய்து தரக்கூடிய வள்ளல்களை இன்றைக்குநாம் உலகில் எங்குமே காணமுடியாது. ஆனால் அசத்தியம் செய்து தருவதில் வல்லவனாகிய துரியோதனனுக்கு உற்ற நண்பனாக விளங்கினாலும் கூட கர்ணன், கேட்டதைத்தருவதாக வயோதிக அந்தணனுக்கு சத்தியம் செய்து தருவதோடு அவ்வயோதிகன் ''கவசகுண்டலங்கள் தரவேண்டும்'' என்று கேட்க ''இதோ தருகிறேன். பெற்றுக்கொள்க'' என்பதாகத் தன் சத்தியத்தில்-கொடையில் உறுதியாக திகழ்கிறான் என்றால் அந்த உத்தம குணத்தை எப்படிப்பாராட்டுவது என்பது தான் தெரியவில்லை.

தன் மார்போடு ஒட்டியிருக்கும் கவசத்தையும், காதுகளோடு ஒட்டியிருக்கும் குண்டலங்களையும், வாள்கொண்டு அரிந்துதான், கர்ணன் அவற்றை எடுத்து தந்தாகவேண்டும். மனமகிழ்ச்சியோடு, உடல் துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு அவற்றை வாள்கொண்டு துனிக்க முற்படுகிறான் கர்ணன். அப்பொழுது ஒரு அசரீரீ முழங்குகிறது. ''கர்ணா! வந்திருப்பவன் அமரர் தலைவன் ஆகிய இந்திரன். கண்ணனின் ஏவலால் வேடம் பூண்டு வந்திருக்கிறான். கவச குண்டலங்களை வழங்காதே! வழங்கினால் உன்உயிருக்கே ஆபத்து!'' —இப்படி அந்த அசரீரீ முழங்குகிறது. அந்த அசரிரிக்குரல், ஆகாயத்திலிருந்து ஒலித்த கதிரவனின் குரலேயாகும். மகனுக்கு உறுதிவேண்டி அர்ச்சுனனின் தந்தை கவசகுண்டலங்களைக் கவர முற்படும்போது, கர்ணனாகிய தன் மகனுக்கு நன்மைவேண்டி, கதிரவன் தடுக்காமல் இருப்பானா? தடுக்கிறான். ''உயிருக்கு ஆபத்து. கவச குண்டலங்களை வழங்காதே! எனக் கூறித்தடுக்கிறான் கதிரவன். ஆனால் வந்திருப்பவன் வஞ்சக வேடதாரியாகிய இந்திரன் என்பது தெரிந்த பிறகும் கூட, கதிரவன் தடுத்தபிறகும் கூட, புன்முறுவல் பூத்த முகத்தோடு கர்ணன் உடைவாளால் மார்புகவசத்தையும், காது குண்டலங்களையும் அறுத்துவந்து அர்ப்பணிக்கிறான் என்றால், அவன் பெருமையைப் போற்றித்தான் வான்புகழ் வள்ளுவப்பெருமான் பாடிவைத்தாரோ!

''சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை''

என்ற திருக்குறள்.

## நல்ல நூல்கள் நமது நண்பர்கள்

நூல்: : பாரதியாரின் குயில்பாட்டு விளக்கம்
நூலாசிரியர்: டாக்டர் மின்னூர் சீனிவாசன்
நூல்வெளியீடு: மின்னூர் வெளியீடு
22/7 தீத்தாரப்பன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600005
விலை: ரூபாய் பத்துமட்டும். பக்கங்கள்: 128.

பேராசிரியர் கவிஞர் டாக்டர் மின்னூர் சீனிவாசன் அவர்கள், தமிழ்கூறு நல்லுலகம் போற்றும் கவிஞர் பெருமக்களில் தலைசிறந்தவர். அவர் மூன்றாம் வகுப்பு படிக்கும் சிறுவருக்கும் குழந்தைப் பாடல்களை வழங்குவார். கல்லூரியில் முதுகலை பயிலும் இளைஞர்களுக்கும் சமுதாயக் கவிதைகளைப் புனைந்திடுவார். வயதில் மூத்த முதியவர்களுக்கும் சிறந்த தத்துவக்கவிதைகளைப் பொழிந்திடுவார். கவிதைகளைத் தாமே புனைவதோடு பிறருடைய கவிதை இலக்கியங்களையும் கூர்ந்து படித்து, ஒப்புநோக்கி, ஆழமாகச் சிந்தித்து ஆராய்ச்சித் திறத்தோடு வெளிப்படுத்துவதில் தமக்கென ஒரு தனி பாணியைப் பின்பற்றுபவர் டாக்டர் மின்னூரார். ''பாரதியாரின் குயில் பாட்டு விளக்கம்'' என வெளி வந்திருக்கும் அவருடைய இந்தச் சிறந்த ஆராய்ச்சி நூல், பாரதி நேயர்கள் ஒவ்வொருவர் கையிலும் திகழவேண்டிய அருமையான நூலாகும்.

''வந்த அந்தணன் கவச குண்டலங்களை
வாங்கி நீ வழங்கெனக் கென்னத்
தந்தனன் பெறுக என அவன் வழங்க
விண்டலத்திலோர் தனியசரிரி
இந்திரன்தனை விரகினான் மாயவன் ஏவி
னான் வழங்கல்நீ எனவும்
சிந்தையின்கண் கலக்கமற்று அளித்தனன்
செஞ்சுடர்த்தினகரன் சிறுவன்''
(கிருட்டிணன் தூது242)

என்ற வில்லிபாரதப் பாடலால் கர்ணனின் அளப்பரும் கொடைப் பெருமையை நாம் அறிந்து வியக்கிறோம்.

இந்திரனுக்கு இதுவரை தான் அமரர் தலைவன் என்ற இறுமாப்பு இருந்தது. கர்ணன் வெறும் அங்கநாட்டை ஆளக்கூடிய குறுநில மன்னன்தானே என்ற தாழ்வுணர்ச்சியும் இருந்ததால்தான், தாழ்ந்தவன் ஒருவனிடம் உயர்ந்தவன் ஆகிய நான் எப்படி சுயஉருவில் போய் யாசிப்பது என்பதாக எண்ணி, வயோதிக அந்தணனாக வேடம் மாற்றி வந்து யாசித்தான். அசரிரி குரல் தடுத்தபோதும் அதன் அறிவுரையை மதிக்காது, தன் வள்ளண்மையையே மதித்துக்கர்ணன் கவச குண்டலங்களை அறுத்துவந்து அர்ப்பணித்தவுடன், கர்ணன் எட்டாத உயரத்திற்கு உயர்ந்து விட்டதை உணர்ந்து கொண்ட இந்திரன், தான் அவன்முன் மிகவும்எளியனாகிவிட்டதைத் தெளிகிறான். உடனே தன்னுடைய சுயஉருவைக் எடுத்துக் கொண்ட இந்திரன் கர்ணனின் அற்புதக்கொடையை நெஞ்சாரப் போற்றி அதனை ஏற்றுக்கொள்கிறான். கர்ணனின் மாபெரும் வள்ளல் தன்மையைப்பாராட்டு முகத்தான் தானும் ஒரு அற்புத வேலினை வரவழைத்துக் ''கர்ணா! இக்கொற்றவேலினைப்பெற்றுக்கொள்க. அர்ச்சுனன் மேல் இவ்வேலை நீ ஏவினால் அது பயன்படாது. கடோற்கசன் மேல் நீ ஏவுவாய் ஆனால் அவன் உயிரை இவ்வேல் உண்டுவிடும்'' என்பதாகக் கூறி வழங்க, கர்ணவள்ளலும் அவ்வேலினை வணங்கிப்பெற்றுக்கொள்கிறான்.




புத்தாண்டு தினத்தன்று காலை மாண்புமிகு டாக்டர் தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் விசேட பூஜையுடன் அர்ச்சனையும் நிகழ்த்தப்பட்டது. ஆலயத் தக்கார் திரு க. பொன்னுசாமி அவர்கள், தம் துணைவியாருடன் மாண்புமிகு முதல்வரின் இராமாவரம் இல்லத்திற்குச் சென்று 1.1.86 அன்று மாலையே பழநி முருகனின் பிரசாதத்தை வழங்கியபோது எடுக்கப்பட்டது இப்புகைப்படம். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு ப. உ. சண்முகம் மற்றும் பழநித்திருக் கோயிலின் நிர்வாக அதிகாரியும் துணை ஆணையருமான திரு கே.எஸ். சோமசுந்தரம் ஆகியோர் படத்தில் உள்ளனர்.

கடோற்கஜன் என்ற பெயரைச் சொன்னாலே வீரம் வரக்கூடிய அளவிற்கு அப்பெயரில் ஒரு கம்பீரம் இருப்பதைக்காணலாம். கடோற்கஜன் வீமனுடைய மகன். துரியோதனன் அரக்கு மாளிகை அமைத்துப்பாண்டவர்களை அழிக்க முற்பட்ட போது மிக பலவானாகிய வீமசேனன் தன் உடன் பிறந்தோரையும் தாயையும் காப்பாற்றி, இடும்பவனம் என்ற காட்டிற்கு அழைத்துச்செல்லும் போது, அவ்வனத்திலே வாழ்ந்திருந்த இடும்பன் என்ற அரக்கனைக்கொன்று, அவன் தங்கையாகிய இடும்பி என்ற அரக்கி ஆசையால் வேண்ட, அவளை மணந்துபின் ஈன்றெடுத்த வீரக்காளை தான் கடோற்கஜன். அவனுடைய வீரமும் தீரமும் மகாபாரதத்தில் மாற்றாரும் மெச்சத்தக்கதாய் அமைந்திருப்பதாகும். அத்தகு மாபெரும் வீரனை கொல்ல வல்லதான கொற்றவேலைத்தான், கர்ணனுக்கு மனம் உவந்து வழங்குகிறான் இந்திரன். கர்ணன் கவச குண்டலங்களை இந்திரனுக்கு வழங்கி அர்ச்சுனன் கையால் மாளவேண்டும் என்பதும், வீரதிர பராக்கிரமசாலியான கடோற்கஜன் இந்திரனுடைய வேலால், கர்ணனால் கொல்லப் படவேண்டும்என்பதும் விதியே போலும்! விதியின் நாயகன் விளையாட்டை யார்தான் மீற முடியும்?

கர்ணனின் கவச குண்டலங்களைப்பெற்றுக் கொண்டுவிட்ட இந்திரன் கண்ணனை அடைந்து, நடந்தவற்றையெல்லாம் மனம் நெகிழ எடுத்துரைக்கிறான். கர்ணனின் கொடைத்திறத்தால் தாமும் மனம் நெகிழ்ந்துபோன கண்ணபெருமான் நெருங்கிய உறவினர்கள் வந்து கெஞ்சினாலும் அற்பப் பொருளைக் கொடுப்பதற்கும் தயங்குகின்ற பலர் வாழ்கின்ற இந்த பூமியில், எதிரிகளின் எத்தகைய சிறந்த ஆயுதமும் வந்து தாக்காமல் காக்கக்கூடிய கவசகுண்டலங்களை மனமுவந்து ஈந்த கர்ணனின் பெருமைக்கு ஈடே இல்லை. கொடையாளர்கள் தம்முயிரைப் பகைவர் கேட்டாலும் மறுக்காமல் கொடுப்பார்கள் என்பதாகக் கர்ணனைப் புகழ்ந்துரைத்து இந்திரனுக்கு விடைகொடுத்து அனுப்புகிறார். ''கர்ணனின் கவச குண்டலங்களைத்தான் பெற்றுக்கொண்டுவிட்டோமே! இதுபோதும்'' என்பதாகப் பரந்தாமனின் நெஞ்சம்அத்துடன் திருப்தி கொண்டதா? என்றால் இல்லை. அவர் குந்திதேவியின் வீட்டிற்கு மறுபடியும் போய் ''கர்ணனுடைய வீட்டிற்கு உடனே நீ போய், நான் ஏவிய காரியத்தைச் செய்து முடிப்பாயாக'' என்று குந்தியைக் கர்ணனின் வீட்டிற்கு செல்லுமாறு தூண்டுகிறார். கண்ணனின் வேண்டுகோளை ஏற்றுக்குந்தி கர்ணனின் மாளிகைக்குப் போனாளா? தாயும் மகனும் பலப்பல வருடங்களுக்குப் பிறகு சந்தித்துக் கொள்ளும் அந்தப் பாசமிகு காட்சி நிகழ்கிறதா? கண்ணன் கூறியவாறே குந்தி கர்ணனிடம் வரம் கேட்டுப் பெற்றாரா? குந்தியைத்தன்னுடைய தாய்தான் என்பதாகக் கர்ணன் ஏற்றுக்கொண்டானா? என்பனவற்றையெல்லாம் இனி அடுத்த இதழில் விரிவாகக் காண்போம்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் தகவல் நிலையத்தை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தபொழுது எடுக்கப்பட்ட படம்.






# வள்ளல் பெருமானும் வள்ளல் டாக்டர் முதல்வரும்

வள்ளலார் அவதரித்தது அக்டோபர் திங்கள் 5ஆம் நாளாகும். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரும் உடல்நலம் இன்றி அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப் பட்டதும் அக்டோபர் திங்கள் 5ஆம் நாள் இரவுதான். வள்ளல் பெருமான் சித்திவளாகத்தில் தம்மைத் தாமே திருக்காப்பிட்டுக் கொண்டது ஒரு தைப் பூசம். வள்ளல் டாக்டர் எம்.ஜி.ஆர். பூரணநலம் பெற்று பல லட்சக் கணக்கான மக்கள் காணத் தமிழ் மண்ணில் மீண்டும் தோன்றியதும் தைப் பூசம்தான். பசிப்பிணி களைவதற் காக வடலூரில் வள்ளலார் மூட்டிய அடுப்பு, இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது. 85 லட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு ஊட்டும் முதல்வரின் திருப்பணி என்றென்றும் நடந்து கொண்டே இருக்க, வள்ளல் பெருமானே நம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவராய் மீண்டும் தோன்றி வந்திருக்கிறார் எனவே நான் நம்புகிறேன்.

—வள்ளலார் - மகாத்மா விழாவில்
மாண்புமிகு ஆர்.எம்.வீ. கூறியது.

